NOT FOR COMMERCIAL PURPOSE

بسم الله الرحمن الرحيم

# عقيدة أهل السنة والجماعة

# நம்பிக்கையின் அடிப்படைகள்

ஆசிரியர்:

**அஷ்ஷைக் முஹம்மது இப்னு ஸாலிஹ் அல்உஸைமீன்**

தமிழில்:

**கா. முஹம்மது பிலால் பாகவி**

&

**முஃப்தி அ. உமர் ஷரீஃப் காஸிமி**

DARUL HUDA

# பொருளடக்கம்

பதிப்புரை .................... 5

தாருல் ஹுதா - ஓர் அறிமுகம் .................... 9

மதிப்புரை .................... 27

முன்னுரை .................... 30

நுழைவாயில் .................... 36

அல்லாஹ் .................... 37

மலக்குகள் (வானவர்கள்) .................... 73

நூல்கள் .................... 80

தூதர்கள் .................... 91

மறுமை நாள் .................... 110

விதி .................... 127

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் .................... 144

மலக்குகளை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் ........ 145

நூல்களை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் ........ 146

தூதர்களை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் ........ 147

மறுமை நாளை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் ........ 148

விதியை நம்பிக்கை கொள்வதின் பலன்கள் ........ 149

நம்பிக்கையாளர்களிடம் இருக்கக் கூடாதவை ........ 153

# பதிப்புரை

தொடக்கத்திலும் இறுதியிலும் அகிலத்தாரின் இறைவன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்!

அகிலத்தாரின் அருட்கொடை இறுதி இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் இறையருளும் ஈடேற்றமும் உண்டாகுக!

அல்லாஹ், தனது படைப்பினங்களில் மனிதர்களை மிக உயர்ந்த படைப்பினமாக ஆக்கியுள்ளான். மேலும், அவர்களை நேர்வழிப்படுத்துவதற்காகத் தூதர்களை அனுப்பினான். வழிகாட்டும் நூல்களை இறக்கினான். மற்ற படைப்பினங்களை மனிதனுக்காகவே படைத்தான்; மனிதனை தன்னை வணங்குவதற்காகவே படைத்தான்.

மனிதனின் முதல் கடமை தன்னைப் படைத்த இறைவனை அவன் கூறிய விதத்தில் அறிந்து கொள்வதாகும். அடுத்து அவன் நம்மை எதற்காகப் படைத்தான், நாம் எப்படி வாழவேண்டுமென

அவன் விரும்புகிறான், அவனுக்குப் பிடித்தது என்ன, பிடிக்காதது என்ன ஆகியவற்றைத் தெரிந்து அதன் படி நடப்பதாகும்.

இந்த இரண்டு விஷயங்களையும் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே அல்லாஹ் தனது நூல்களை இறக்கினான்; தூதர்களை அனுப்பினான்.

குர்ஆனுக்கு முன் இறக்கப்பட்ட நூல்கள் மாற்றப் பட்டுவிட்டன. முஹம்மது ﷺ அவர்களுக்கு முன் வந்த தூதர்களின் வழிகாட்டல்களுக்கும் அடிச் சுவடு இப்போது இல்லை.

இனி உலக மக்கள் அனைவரும் நேர்வழி பெற்று இறைவனின் அன்பை அடைய வேண்டுமென்றால், இவ்வுலகில் சாந்தி சமாதானத்துடன் வாழ்ந்து மறுமை யிலும் வெற்றி பெறவேண்டுமென்றால், அதற்கு ஒரே வழி அல்குர்ஆனையும் முஹம்மது நபி ﷺ அவர் களையும் ஏற்றுக் கொள்வதே ஆகும்.

இந்தச் சிறு நூலில் அல்குர்ஆன் மற்றும் நபிமொழி யின் வெளிச்சத்தில் ஒரு முஸ்லிம் தனது

இறைவனாகிய அல்லாஹ்வை எப்படி நம்பிக்கை கொள்ளவேண்டும். மேலும், அவன் நம்பிக்கை கொள்ளவேண்டிய விஷயங்கள் என்னென்ன, அவற்றை எப்படி நம்பிக்கை கொள்வது போன்ற விவரங்கள் தகுந்த ஆதாரங்களுடன் கொடுக்கப் பட்டுள்ளன. இப்படி நம்பிக்கை கொள்வதால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இந்நூலில் கூறப்பட்ட அனைத்தும் இஸ்லாம் இயம்பும் அடிப்படை கொள்கைகளாகும்.

இந்நூல் பார்ப்பதற்கு தோற்றத்தில் மிகச் சிறியதே! ஆனால், இதிலுள்ள கருத்துகள் அவசியம் அனை வரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவை. இங்கு கூறப்பட்டுள்ள உண்மைகளுக்கு ஏற்ப நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதற்கு மாற்றமான விஷயங்களை விட்டும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நம்பிக்கையில் ஏற்படும் தவறு மிகப்பெரும் நஷ்டத்தை இம்மையிலும் மறுமையிலும் ஏற்படுத்தி

விடும். ஆகவே, இந்நூலை நாம் படித்து பயன் பெறுவதுடன் மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்து வோமாக!

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவன் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக! நம் பாவங்களை மன்னிப்பானாக! நூலின் ஆசிரியருக் கும் அதை மொழிபெயர்ப்பதில் உதவிய சகோதரர் களுக்கும் மற்றும் தாருல் ஹுதாவின் மார்க்கப் பணிகள் வளர்ச்சி பெற உதவும் சகோதர சகோதரிகள் அனைவருக்கும் அல்லாஹ் அருளை யும் அன்பையும் வழங்குவானாக!! ஆமீன்.

**முஃப்தி உமர் ஷரீஃப் காஸிமி**
(அல்குர்ஆன் மற்றும் நபிமொழிப் பணியாளன்)
தாருல் ஹுதா, சென்னை - 1.

# மதிப்புரை

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்!

நமது சகோதரர் அஷ்ஷைக் முஹம்மது இப்னு ஸாலிஹ் அல்உஸைமீன் அவர்கள் இஸ்லாமின் நேரிய கொள்கைகளைப் பற்றி கோர்வை செய்த இச்சிறு நூலை ஆய்வு செய்தேன். அல்லாஹ்வின் ஏகத்துவம், அவனது அழகிய பெயர்கள், பண்புகள் மேலும் மலக்குகளை, வேதங்களை, இறைத்தூதர்களை, மறுமை நாளை, நன்மை, தீமை 'கத்ர்' விதியைக் கொண்டே நடக்கிறது என்று ஈமான் கொள்வது சம்பந்தமான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

அல்லாஹ்வையும், மலக்குகளையும், வேதங் களையும், இறைத்தூதர்களையும், மறுமை நாளையும் நன்மை, தீமை 'கத்ர்' விதியைக் கொண்டே நடக்கிறது என்று ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமுக்கும் குறிப்பாக கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இந்நூலைத் தொகுத்து நூலாசிரியர் பேருதவி செய்துள்ளார்.

அது மட்டுமின்றி கொள்கை பற்றி எழுதப்பட்ட பெரும்பாலான நூற்களில் கிடைக்காத கொள்கை சார்ந்த நுட்பமான விஷயங்களையும் இந்நூலில் தொகுத்துள்ளார். அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்குவானாக! ஞானத்தை அதிகப்படுத்தி, அவரை நேர்வழியில் உறுதிப்படுத்துவானாக! இந்நூலையும், அவரது ஏனைய நூல்களையும் பயன் தரத்தக்கதாக ஆக்கி அருள்வானாக!

நம்மையும், அவரையும், நம் அனைத்து சகோதரர்களையும் நேர்வழி பெற்ற நல்வழி காட்டிகளாகவும், விவேகத்துடன் இறை

அழைப்புப் பணி செய்பவர்களாகவும் ஆக்கி அருள்வானாக! நிச்சயமாக அல்லாஹ் நெருக்க மானவனாகவும் செவியேற்பவனாகவும் இருக்கி றான். அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் நமது நபி முஹம்மது ﷺ அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள் அனை வர் மீதும் என்றென்றும் உண்டாகட்டும்!

இறையருளின்பால் என்றென்றும் தேவையு டைய,

**அப்துல் அஜீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ்**

(ரஹ்மத்துல்லாஹி அலைஹி)

# முன்னுரை

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ் தஆலாவுக்கே அனைத்துப் புகழும்! நல்ல முடிவு இறையச்சம் உடையவர்களுக்கே! அக்கிரமம் செய்தவர்களைத் தவிர வேறு எவர் மீதும் வரம்பு மீறுதல் இல்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு எந்தவொரு இணையுமில்லை; அவனே உண்மையான அதிபதி என சான்று பகர்கிறேன். மேலும், முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடிமையும் அவனது தூதரும் நபிமார்களில் இறுதியானவர்களும் இறையச்சம் உடையவர்களின் தலைவரும் ஆவார்கள் எனவும் சான்று பகர்கிறேன். அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள் மற்றும் நன்மையால் அவர்களைப் பின்பற்றியவர்கள் அனைவர்

மீதும் அல்லாஹ்வின் பேரருள் மறுமை நாள் வரை உண்டாகட்டும்!

அகிலத்தாரின் வழிகாட்டியாகவும், அருட் கொடையாகவும், சத்திய மார்க்கத்தின் அழைப் பாளராகவும், அடியார்கள் மீதான சாட்சியாகவும் முஹம்மது நபி ﷺ அவர்களை எல்லாம் வல்ல அல்லாஹ் அனுப்பி வைத்தான்.

அடியார்களின் இம்மை மறுமையின் அனைத்து நிலைகளும் சீரடைவதற்குத் தேவையான செம் மையான கொள்கைகள், நேரிய அமல்கள், மேன்மைக்குரிய நற்பண்புகள், உயர் ஒழுக்கம் நிறைந்த போதனைகள் ஆகிய அனைத்தையும், நபி ﷺ அவர்கள் மீது இறக்கிய வேதத்தின் மூலமாகவும் ஞானத்தின் மூலமாகவும் அல்லாஹ் தெளிவுபடுத்தி இருக்கிறான். நபி ﷺ அவர்கள், இரவும் பகலைப் போன்று பிரகாசிக்கும் நேர்வழி யில் தங்களது உம்மத்தினரை விட்டுச் சென் றார்கள். அழிவில் வீழ்ந்தவனைத் தவிர

வேறு எவரும் அப்பாதையிலிருந்து வழிதவற மாட்டார்கள்.

அல்லாஹ்வின், இன்னும் அவனது தூதரின் அழைப்பைச் செவிமடுத்த சமுதாயம் இந்த நேர்வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. இவர்கள்தான் படைப்பினங்களில் மிகச்சிறந்த வர்கள். இவர்கள் யாரெனில், நபித்தோழர் களும், அவர்களைப் பின்பற்றியவர்களும், இவர்களை மனத்தூய்மையுடன் பின்பற்றும் அனைத்து மக்களும் ஆவார்கள். இவர்கள் நபி ﷺ அவர்களின் மார்க்கத்தை நிலைநிறுத்தி அவர்களது வழிமுறையை உறுதியாகப் பற்றிக் கொண்டனர். கொள்கை, வணக்கம், நற்பண்பு கள், ஒழுக்கப் போதனைகள் என நபிவழியின் அனைத்துப் பகுதிகளையும் தங்களது கடவாய் பற்களால் இறுகப் பிடித்துக் கொண்டனர்.

இறுதியாக அவர்கள் என்றென்றும் சத்தியத்தில் மிகைத்து நிற்கும் வெற்றிபெற்ற சமுதாயமாகத்

திகழ்ந்தனர். எதிரிகள் அல்லது முரண்படுபவர்கள், அவர்களுக்கு மறுமைநாள் வரை எவ்வித இடையூறையும் செய்து விடமுடியாது.

அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். நாம் அவர்களது மேலான அடிச்சுவட்டில் நடை போடுகிறோம். குர்ஆனும் நபிவழியும் உறுதிப் படுத்திய அவர்களது வாழ்வைப் பின்பற்றி நேர்வழி பெற்றிருக்கிறோம். இவ்வாறு நாம் கூறுவதன் நோக்கம் (அகந்தையல்ல) அல்லாஹ்வின் அருட்கொடைகளை வெளிப்படுத்துவதும், ஒவ்வொரு முஃமினும் (நம்பிக்கையாளரும்) கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டிய கொள்கைகளை விவரிப்பதுவுமே ஆகும்.

இம்மை - மறுமை வாழ்வில் நம்மையும் நம் முஸ்லிம் சகோதரர்கள் அனைவரையும் அல்லாஹ் (லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற) உறுதியான சொல்லிலேயே நிலைநிறுத்தி வைப்பதையும் அவனது அருளையும் அல்லாஹ்

விடம் வேண்டுகிறோம். நிச்சயமாக அவனே மிக மேலான கொடையாளன்.

**இத்தலைப்பின் முக்கியத்துவம்:** கொள்கை சார்ந்த விஷயங்களில் மனிதர்களின் சிந்தனை கள் பல்வேறு விதங்களில் மாறுபடுகின்றன. எனவே நான் (அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஆ - நபிவழியையும் நபித்தோழர்களையும் பின்பற்றும்) உண்மை முஸ்லிம்களின் கொள்கை களைப் பற்றி சுருக்கமாக எழுத விரும்பினேன்.

எனது இந்த முயற்சி மனத்தூய்மையுடன் அமைந்து, அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்றுத்தருவதாகவும் அவனது அடியார் களுக்குப் பயனளிப்பதாகவும் ஆக்கித்தர அல்லாஹ்வை இறைஞ்சுகிறேன்.

**முஹம்மது இப்னு ஸாலிஹ் அல்உஸைமீன்**

ஹிஜ்ரி 1404, ஷவ்வால் பிறை 30

# தாருல் ஹுதா
## ஓர் அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் ஒரே இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்ற மும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர் களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்!

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

### அஸ்ஸலாமு அலைக்கும்

வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு

தாருல் ஹுதாவை அறிமுகம் செய்வதன் வாயி லாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக் கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவைகளையும் தங்கள் முன் வைக்கிறோம்.

அல்லாஹுூ தஆலா கூறுகிறான்:

***நம்பிக்கை கொண்ட ஆண்களும், நம்பிக்கை கொண்ட பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாவர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப் பிடித்து, ஸகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகையவர்களுக்கு அதிசீக்கிரத்தில் அல்லாஹ் அருள்புரிவான். நிச்சயமாக, அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.''*** *(அத்தவ்பா 9 : 71)*

***(நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் (மனிதர்களை) சிறந்ததின் பக்கம் அழைத்து நன்மையைச் செய்யும்படி***

***ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர் களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தான் வெற்றி பெற்ற வர்கள்.*** *(ஆலுஇம்ரான் 3 : 104)*

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதைத் தமது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தமது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் (நம்பிக்கையின்) குறைந்தபட்ச அளவாகும். (ஸஹீஹ் முஸ்லிம்)

மேலும் கூறினார்கள்: நம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசம் கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஒரே உடலைப்போல. உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால்

அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன.

*(ஸஹீஹுல் புகாரி)*

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழி காட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற் கூறப்பட்ட இறை வசனங்கள் மற்றும் நபி மொழிகளுக்கிணங்க சமுதாயச் சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல் குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறை வேற்றி இறை திருப்தியை அடையவேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் தாருல் ஹுதா.

# தாருல் ஹுதாவின் பணிகளும் தொண்டுகளும்

## அழைத்தல்:

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி இறைத்தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதி இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப்பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்பு மிகு நபிமொழியும் இதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. எனவே, இயன்றளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும் அதன் உயர்வுகளை விளக்கிச் சொல்லி அதன் பக்கம் அழைப்பதும் தாருல் ஹுதாவின் முதல் பணியாகும்.

## கற்பித்தல்:

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மை மிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக் கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது பணியாகும்.

## நூல் வெளியிடுதல்:

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூற்களைத் தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்த நூற்களைச் சலுகை விலையிலும் முடிந்த அளவு இலவசமாகவும் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது பணியாகும்.

**உதவுதல்:**

அல்லாஹுதஆலாவே அனைவரின் தேவை கள், துன்பங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய் பவன். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ் தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந் தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருல கிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம் களுடைய அடிப்படைப் பண்புகளாகும்.

இந்த உன்னதப் பணிக்காக 'பைத்துல்மால்' (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தையும், மார்க்கப் பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று அவற்றை தேவையுடையவர்களுக்கு வழங்குதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

இந்தப் பணிகள் மட்டுமின்றி, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனித சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூகப் புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும், தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், தங்களால் இயன்ற வரை இப்பணிகளில் பங்கு பெறுமாறும் அழைக்கிறோம்.

மேற்கூறப்பட்ட பணிகளை விசாலப்படுத்தவும் மேன்மேலும் அவற்றைச் சிறப்புடன் நிறை

வேற்றவும் தாருல் ஹுதாவிற்காக கீழ்க்காணும் அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன:

அதாவது, பள்ளிவாசல், வகுப்பறைகள், மிகப் பெரிய பொது நூலகம், மொழி பெயர்ப்புப் பணிகளுக்குரிய அறைகள், கருத்தரங்கங்கள் நடத்த சகல வசதிகளுடன் கூடிய வளாகம், மார்க்கக் கல்விகள் முழுநேர வகுப்புகளாக நடத்துவதற்குத் தேவையான கல்வி நிலையம், மாணவர்கள், விருந்தாளிகள், ஊழியர்கள் தங்குவதற்குரிய விடுதிகள், புத்தக விற்பனை நிலையம், பல மொழிகளில் இஸ்லாமிய நூல்கள் வெளியிடுவதற்குரிய மூலதனம், மாதாந்தரச் செலவுகளைப் பூர்த்தி செய்வதற்குரிய வசதிகள் போன்ற தேவைகள் உள்ளன.

நல்லுள்ளம் கொண்ட மேன்மக்களே! நீங்கள் கொடுக்கும் தர்மங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதற்கு நிச்சயம் பேருதவியாக இருக்கும்.

உங்களால் முடிந்த அளவு பங்கு கொண்டு ஈருலக நற்பேறுகளை அடைந்து கொள்ளுங்கள்! மார்க்கத்திற்காகக் கொடுக்கப்படும் தர்மங்களுக்குச் சிறப்புகளும் நன்மைகளும் ஏராளம் உள்ளன என்பது உங்களுக்குத் தெரிந்ததே!

முடிந்த உதவிகளை மறுமையின் வீட்டை நாடி, அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக தந்து உதவுங்கள்.

***நீங்கள் உங்கள் ஆன்மாக்களுக்காக நன்மையில் எதை முற்படுத்திக் கொள்கிறீர்களோ அதைத்தான் அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள்.*** *(அல்குர்ஆன் 73 : 20)*

பேராற்றலுடைய அல்லாஹ் இந்த நல்ல திட்டங்களை நிறைவேற்றித்தரப் போதுமானவன்! அவனிடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!

----------

## நுழைவாயில்

நாம் ஆறு விஷயங்களை நம்பிக்கை கொள்ள வேண்டும். அவை:

**1. அல்லாஹ்,　　4. தூதர்கள்,**
**2. மலக்குகள்,　　5. மறுமை நாள்,**
**3. வேதங்கள்,　　6. விதி.**

இவற்றில் ஒவ்வொன்றையும் எப்படி நம்பிக்கை கொள்வது, அவற்றிற்குரிய ஆதாரங்கள் என்னென்ன என்பதை பின்வரும் பக்கங்களில் சற்று விரிவாகப் பார்ப்போம்.

# அல்லாஹ்

## அல்லாஹ்தான் நமது ‘ரப்பு’

அவனே அனைத்தையும் படைத்தவன்; வளர்ப்பவன்; காப்பவன்; அவனே உண்மையான அரசன்; அகிலங்களில் உள்ள அனைத்தையும் இயக்குபவன்.

## அல்லாஹ்தான் நமது ‘இலாஹ்’

அதாவது, அவனே உண்மையில் வணங்கப்படுவதற்கு தகுதியானவன். அவனைத் தவிர வணங்கப்படும் அனைத்தும் அசத்தியமானவை பொய்யானவை ஆகும்.

நம்பிக்கையின் அடிப்படைகள் | 28

**அவனுக்கு அழகிய பெயர்களும் உயர்ந்த பண்புகளும் உண்டு.**

இந்த அனைத்து விஷயங்களிலும் அவன் தனித்தவன், அதாவது வணக்கத்திற்குரியவன், அவனைத் தவிர வேறு எவருமில்லை; படைத்தல் வளர்த்தல், காத்தல், இறைவனாக இருத்தல், அழகிய பெயர்களையும் உயர்ந்த பண்புகளையும் கொண்டிருத்தல் ஆகிய அனைத்து விஷயங்களிலும் அவனை விட உயர்ந்தவனோ அவனுக்கு நிகரானவனோ எவருமில்லை.

*வானங்களையும், பூமியையும் இவற்றிற்கு மத்தியில் உள்ளவற்றையும் படைத்து, வளர்த்து காப்பவனும் அவனே! ஆதலால், அவன் ஒருவனையே நீர் வணங்குவீராக! அவனை வழிப்படுவதில் (உமக்கு ஏற்படும் கஷ்டங்களையும்) நீர் சகித்துக் கொள்வீராக! அவனுடைய தன்மைக்கு ஒப்பான எவரையும் நீர் அறிவீரா? (மர்யம் 19 : 65)*

*அல்லாஹ் (எத்தகைய மகத்துவமுடைய வனென்றால்) அவனைத் தவிர வணக்கத் திற்குரியவன் (வேறு யாரும்) இல்லவே இல்லை. அவன் என்றும் உயிரோடு இருப்ப வன்; என்றும் நிலையானவன். அவனைச் சிறு தூக்கமும் பெரும் உறக்கமும் பீடிக்காது. வானங்கள், பூமியில் உள்ளவை அனைத்தும் அவனுடையதே! அவனுடைய அனுமதி யின்றி, அவனிடத்தில் (எவருக்காகிலும்) யார்தான் பரிந்து பேசக்கூடும்? அவர்க ளுக்கு முன் இருப்பவற்றையும் பின் இருப்பவற்றையும் அவன் நன்கறிவான். அவனுடைய விருப்ப மின்றி அவனுக்குத் தெரிந்தவற்றிலிருந்து எதையும் (மற்றெவரும் தங்கள் அறிவால்)அறிந்து கொள்ள முடியாது. அவனுடைய குர்ஸி, வானங்கள் பூமியைவிட விசாலமாயிருக்கின்றது. அவ்விரண்டையும் கா(த்து இரட்சி)ப்பது அவனுக்குச் சிரமமன்று. மேலும், அவன்*

*மிக உயர்ந்தவன்; மிக்க மகத்தானவன்.*

*(அல்பகரா 2 : 255)*

*அந்த அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற் குரியவன் (வேறு யாரும்) இல்லவேஇல்லை. (அவனே) மறைவானதையும் வெளிப்படை யானதையும் நன்கறிந்தவன். அவனே அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்.*

*அந்த அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற் குரியவன் வேறு யாரும் இல்லை. அவன் தான் உண்மையான அரசன்; பரிசுத்தமான வன்; ஈடேற்றம் அளிப்பவன்; அபயமளிப்ப வன்; பாதுகாவலன்; (அனைவரையும்) மிகைத்தவன்; அடக்கி ஆள்பவன்; பெருமைக்குரியவன்; இவர்கள் கூறும் இணை துணைகளை விட்டு அந்த அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன். அந்த அல்லாஹ்தான் படைப்பவன். (அவனே)*

*படைப்புகளை ஒழுங்குசெய்பவன்; (அவனே) படைப்புகளின் உருவத்தையும் அமைப்பவன். அவனுக்கு அழகிய பல பெயர்கள் இருக்கின்றன. வானங்கள் மற்றும் பூமியில் உள்ள அனைத்தும் அவனையே துதி செய்கின்றன. அவனே (அனைவரையும்) மிகைத்தவன்; மிக்க ஞானமுடையவன்.*

*(அல்ஹஷ்ர் 59 : 22-24)*

**வானம், பூமி மற்றும் அகிலங்கள் அனைத்தின் அரசாட்சி அவனுக்கே உரித்தானது.**

*வானம், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே! இவற்றைத் தவிர, அவன் நாடியவற்றையும் படைக்கிறான். ஆகவே, அவன் நாடியவர்களுக்குப் பெண் சந்ததியை மட்டும் கொடுக்கின்றான். அவன் நாடியவர்களுக்கு ஆண் சந்ததியைக் கொடுக்கின்றான். அல்லது ஆணையும், பெண்ணையும் கலந்தே கொடுக்கின்றான்.*

*மேலும் அவன் நாடியவர்களை (சந்ததியற்ற) மலடாகவும் ஆக்கிவிடுகின்றான். நிச்சய மாக அவன் (அவர்களின் தகுதியை) நன்க றிந்தோனும் (தான் விரும்பியவாறு செய்ய) ஆற்றலுடையோனுமாக இருக்கின்றான்.*

*(அஷ்ஷூரா 42 : 49, 50)*

*அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்) செவியுறுபவனாகவும் உற்று நோக்கியவனாகவும் இருக்கின்றான். வானங்கள், பூமியின் (பொக்கிஷங்களின்) சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவன் நாடியவர்களுக்கு வாழ்வாதாரத்தை விரிவாக்குகிறான். (அவன் நாடியவர் களுக்குச்) சுருக்கி விடுகின்றான். நிச்சயமாக அவன் அனைத்தையும் நன்கறிந்தவன். (ஆகவே அவரவர் தகுதிக்குத் தக்கவாறு கொடுக்கின்றான்).*

*(அஷ்ஷூரா 42 : 11, 12)*

*உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் பூமியில் இல்லை. அவை தங்கியிருக்குமிடத்தையும் அவை இறந்து அடங்குமிடத்தையும் அவன் அறிந்தேயிருக்கின்றான். இவை அனைத்தும் (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) தெளிவான (அவனுடைய) பதிவுப் புத்தகத்தில் பதிவாகி இருக்கின்றன. (ஹூது 11 : 6)*

*மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்(றில் உள்ளவற்)றை அவனைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார். தரையிலும் கடலிலும் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை. பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருளில் (புதைந்து) கிடக்கும் (கடுகு போன்ற சிறிய) வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் அவனுடைய தெளிவான (பதிவுப்)*

*புத்தகத்தில் இல்லாமலில்லை.*

*(அல்அன்ஆம் 6 : 59)*

*நிச்சயமாக (உலக முடிவு) காலத்தைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடத்தில் (மட்டும்) தான் இருக்கிறது. அவனே மழையை இறக்கி வைக்கிறான்; அவனே கர்ப்பங்களில் தரிப்பதையும் அறிவான். எவரும் நாளைக்கு அவர் என்ன செய்வார் என்பதை அறிய மாட்டார். எந்த பூமியில் இறப்பார் என்பதையும் எவரும் அறிய மாட்டார். நிச்சயமாக அல்லாஹ்தான் (இவற்றை) நன்கறிந்தோனும் தெரிந்தோனுமாக இருக்கிறான். (லுக்மான் 31 : 34)*

**நிச்சயமாக அல்லாஹ், தான் விரும்பியதை விரும்பிய நேரத்தில் விரும்பிய விதத்தில் பேசுவான்**

*மூஸாவு(க்கு வஹ்யி அறிவித்தது)டன்*

*அல்லாஹ் பேசியும் இருக்கின்றான்.*
*(அன்னிஸா 4 : 164)*

*நாம் (குறிப்பிட்ட இடத்திற்கு) குறிப்பிட்ட நேரத்தில் மூஸா வந்தபொழுது அவருடைய இறைவன் அவருடன் பேசினான்...*
*(அல்அஃராஃப் 7 : 143)*

*தூர் (ஸீனாய் என்னும் பாக்கியம் பெற்ற) மலையின் வலது பக்கத்திலிருந்து அவரை நாம் அழைத்தோம். ரகசியம் பேசுகிறவராக அவரை (நமக்கு) நெருக்கமாக்கினோம்.*
*(மர்யம் 19 : 52)*

*(நபியே!) நீர் கூறும்: கடல் நீர் யாவும் மை யாக இருந்து என் இறைவனின் வாக்கியங் களை எழுத ஆரம்பித்தால், என் இறைவனின் வாக்கியங்கள் முடிவதற்கு முன்னதாகவே இந்த கடல் மை அனைத்தும் தீர்ந்துவிடும்.*
*(அல்கஹ்ஃபு 18 : 109)*

*பூமியிலுள்ள மரங்கள் (செடிகள்) அனைத்தும் எழுதுகோல்களாகவும், கடல் நீரை மையாகவும் வைத்து (அது தீர்ந்து) பின்னும் ஏழு கடல்கள் நீரையும் மையாக வைத்து (எழுதிய) போதிலும் அல்லாஹ்வுடைய வசனங்கள் (எழுதி) முடிவு பெறாது. நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) மிகைத்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கிறான். (லுக்மான் 31 : 27)*

**அல்லாஹ்வின் பேச்சு முழுமையான செய்திகளைக் கொண்டது; மிக்க அழகானது; அவனது சட்டங்கள் நீதமானவை**

*(நபியே!) உமது இறைவனின் பேச்சு உண்மையிலும் நீதத்திலும் பரிபூரணமாகி விட்டது. (அல்அன்ஆம் 6 : 115)*

*அல்லாஹ்வைவிட உண்மை பேசுபவர் யார் இருக்கமுடியும்? (அன்னிஸா 4 : 87)*

கண்ணியமிக்க குர்ஆன் அல்லாஹ்வின் “கலாம்” (பேச்சு) ஆகும். அது அல்லாஹ்வே பேசியதாகும். அதை அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வழியாக முஹம்மது ﷺ அவர்களின் நெஞ்சத்தில் இறக்கி வைத்தான்.

*உண்மையாகவே இதை உம் இறைவனிடமிருந்து, ‘ரூஹுல் குத்ஸ்’ (என்னும் ஜிப்ரீல்) தான் இறக்கி வைத்தார் என்று (நபியே!) நீர் கூறுவீராக! (அந்நஹ்ல் 16 : 102)*

*(நபியே!) குர்ஆன் (என்னும் இவ்வேதம்) அகிலத்தாரின் இறைவனால்தான் அருளப் பெற்றது. (இறைவனின் கட்டளைப் பிரகாரம்) ரூஹுல் அமீன் (என்னும் ஜிப்ரீல்) இதனை உமது இதயத்தில் இறக்கி வைத்தார்; (மனிதர்களுக்கு) நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக. தெளிவான அரபி மொழியில் (அது இறக்கப்பட்டுள்ளது). (அஷ்ஷுஅரா 26 : 192, 195)*

அல்லாஹ் தனது உள்ளமை (தாத்) மற்றும் பண்புகளில் படைப்புகளைவிட மிகவும் மேலானவன்; உயர்ந்தவன்.

*அவன் மிக உயர்ந்தவன்; மிக்க மகத்தானவன். (அல்பகரா 2 : 255)*

*அவனே தன் அடியார்களை அடக்கி ஆள்கிறான். மேலும் அவன் மிக்க ஞான முடையோனாகவும் (அனைத்தையும்) நன்கறிந்தோனாகவும் இருக்கிறான். (அல்அன்ஆம் 6 : 18)*

*அந்த அல்லாஹ்தான், வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்து விட்டான். சகல காரியங்களையும் அவனே திட்டமிட்டு (நிர்வகித்து)ம் வருகின்றான். (யூனுஸ் 10 : 3)*

அல்லாஹ் தன்னுடைய உயர்வுக்கும்

கண்ணியத்திற்கும் தக்கவாறு அர்ஷிற்கு மேல் உயர்ந்துள்ளான். அவன் அர்ஷிற்கு மேல் உயர்ந்துள்ள அமைப்பை அவனைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது.

அல்லாஹ் அர்ஷிற்கு மேல் உயர்ந்துள்ள நிலையில் தனது படைப்புகளுடனும் இருக்கிறான்; அதாவது அவர்கள் செயல்களைப் பார்க்கிறான்; அவர்களின் காரியங்களை நடத்துகிறான்; ஏழைக்கு உணவளிக்கிறான்; மனமுடைந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறான். தான் நாடியவர்களுக்கு அரசாட்சியைத் தருகிறான்; தான் நாடியவர்களிடமிருந்து அரசாட்சியைப் பிடுங்குகிறான்; தான் நாடியவர்களுக்குக் கண்ணியத்தைக் கொடுக்கிறான்; தான் நாடியவர்களுக்கு இழிவைத் தருகிறான். அவன் கையில் தான் எல்லா நலன்களும் இருக்கின்றன. அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன்.

அவன் படைப்பினங்களைவிட உயர்வாக

அர்ஷிற்கு மேல் இருந்தாலும் மேற் குறிப்பிடப் பட்ட உயர்ந்த தன்மைகளால் தனது படைப் புகளுடனும் இருக்கிறான்.

அவனது தன்மைகளைப் படைப்பினங்களு டைய தன்மைகளுடன் ஒப்பிட முடியாது.

*அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன்தான் (அனைத்தையும்) செவியுறு பவனாகவும் உற்று நோக்கியவனாகவும் இருக்கின்றான். (அஷ்ஷூரா 42 : 11)*

“அல்லாஹ் பூமியில் படைப்பினங்களுடன் இருக்கிறான்” என்று சொல்லக்கூடாது. அவ்வாறு கூறுவது “காஃபிர் - நிராகரிப்போர்’ அல்லது வழி கெட்டவர்களின் கூற்றாகும். ஏனெனில், இக்கூற்று அல்லாஹ்வுக்குத் தகுதி இல்லாத குறையைக் கொண்டு அல்லாஹ்வை வர்ணிப்பதாகும்.

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: “இரவின்

இறுதி நேரத்தில் அல்லாஹ் முதல் வானத்திற்கு இறங்குகிறான்". அப்போது "யார் என்னிடம் துஆ செய்கிறார்களோ அதை ஏற்றுக் கொள்கிறேன். யார் என்னிடம் கேட்கிறார்களோ அதைக் கொடுக்கிறேன். யார் என்னிடம் பாவமன்னிப்புக் கேட்கிறாரோ அவரை நான் மன்னிக்கிறேன்' என்று அல்லாஹ் கூறுகிறான்."

(ஸஹீஹுல் புகாரி - 1145)

## அல்லாஹ் மறுமை நாளில் தனது அடியார் களுக்கிடையே தீர்ப்பளிப்பதற்காக வருவான்

*பூமி தூள் தூளாகத் தகர்க்கப்படும் சமயத் தில், உமது இறைவனும் வருவான். மலக்கு களும் அணி அணியாக வருவார்கள். அந் நாளில் (பாவிகளுக்காக) நரகம் கொண்டு வரப்படும். அந்நாளில் மனிதனுக்கு நல்லறிவு உதயமாகும். எனினும் அச்சமயம் (உதயமாகும்) அறிவால் அவனுக்கு என்ன பலன்? (அல்ஃபஜ்ர் 89 : 21, 22, 23)*

**அல்லாஹ்வின் இறங்குதலையும் வருகையையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை மறுக்கவோ, அதற்கு மாற்றுக் கருத்து கூறவோ, உவமை கூறவோ கூடாது.**

*"நிச்சயமாக உமது இறைவன்; தான் நாடியவற்றை (தடையின்றி) செய்து முடிப்பவன்."* *(ஹூது 11 : 107)*

**அல்லாஹ்வின் நாட்டம் இரு வகைப்படும்.**

முதலாவது: **"கவ்னிய்யா"** - உலக நியதியைச் சார்ந்தது. இது அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும். ஆனால், இந்த நாட்டம் அல்லாஹ்வுக்கு விருப்பமானதாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இதுவே பின்வரும் வசனத்தில் கூறப்படும் "நாட்டம்' என்பதன் பொருளாகும்.

*அல்லாஹ் நாடியிருந்தால் (இவ்வாறு) அவர்கள் சண்டை செய்திருக்க மாட்டார்கள். ஆனால், அல்லாஹ் தான் நாடியவற்றையே*

*செய்வான். (அல்பகரா 2 : 253)*

*“உங்களை வழிகேட்டிலேயே விட்டுவிட வேண்டுமென்று அல்லாஹ் நாடியிருந்தால்...” (ஹூத் 11 : 34)*

இரண்டாவது: **“ஷர்யிய்யா”** - மார்க்க நியதியைச் சார்ந்தது. இந்த வகை நாட்டம் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு விருப்பமானதாக இருக்கும். எனினும், இந்த நாட்டம் நிகழாமலும் போகலாம். (உதாரணம், மனிதன் தொழவேண்டுமென அல்லாஹ் நாடுகிறான். ஆனால், சிலர் தொழுவதில்லை.)

*“அல்லாஹ் உங்களை மன்னிக்க நாடுகிறான்.” (அன்னிஸா 4 : 27)*

என அல்லாஹ் கூறுவது இவ்வகையே!

“ஷர்யிய்யா அடிப்படையில் உள்ள நாட்டமும்’ “கவ்னிய்யா அடிப்படையில் உள்ள நாட்டமும்’ அல்லாஹ்வின் மாபெரும் ஞானத்தை அடிப்

படையாகக் கொண்டதாகும். அந்த ஞானத்தை யும் நுட்பத்தையும் நாம் அறிந்து கொண்டாலும் சரியே; அறிய இயலவில்லையானாலும் சரியே. ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான்:

“*தீர்ப்பளிப்போரிலெல்லாம் அல்லாஹ் மிக மேலான தீர்ப்பளிப்பவனல்லவா?*”

*(அத்தீன் 95 : 8)*

“*உண்மையாகவே உறுதியான நம்பிக்கை கொண்ட மக்களுக்கு அல்லாஹ்வை விட மிக அழகான தீர்ப்பளிப்பவர் யார்?*”

*(அல்மாயிதா 5 : 50)*

**அல்லாஹ் தனது நேசர்களை நேசிக்கிறான்; அந்த நேசர்களும் அல்லாஹ்வை நேசிக்கிறார்கள்.**

‘‘*(நபியே! மனிதர்களை நோக்கி) நீர் கூறும்! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயி ருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்.*

*அல்லாஹ் உங்களை நேசிப்பான்.”*

*(ஆலு இம்ரான் 3 : 31)*

*“நம்பிக்கையாளர்களே! உங்களில் எவரேனும் தம் மார்க்கத்தை விட்டும் மாறி விட்டால் வேறு மக்களை அல்லாஹ் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான்; அவர்களும் அவனை நேசிப்பார்கள்.” (அல்மாயிதா 5 : 54)*

*“அல்லாஹ் பொறுமையாளர்களை நேசிக்கிறான்.” (ஆலு இம்ரான் 3 : 146)*

*“நீதமாக தீர்ப்பளியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்வோரை நேசிக்கிறான்.”*

*(அல்ஹுஜ்ராத் 49 : 9)*

*“மேலும், நன்மை செய்யுங்கள். அல்லாஹ் நன்மை செய்வோரை நேசிக்கிறான்.”*

*(அல்மாயிதா 5 : 93)*

**அல்லாஹ் மார்க்கமாக ஆக்கிய அனைத்து நற்செயல்களையும், நல்ல வார்த்தைகளையும் அவன் நேசிக்கின்றான்; அவற்றைக் கொண்டு அவன் மகிழ்ச்சி அடைகிறான்; அவன் விலக்கியவற்றை வெறுக்கிறான்.**

*"அவனை நீங்கள் நிராகரித்துவிட்டால் (அதனால் அவனுக்கு நஷ்டமில்லை. ஏனென்றால்,) நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய தேவையற்றோனாக இருக் கிறான். எனினும் தன் அடியார்கள் (தன்னை) நிராகரிப்பதை அவன் விரும்புவ தேயில்லை. நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவீர்களாயின், உங்களைப் பற்றி அவன் திருப்தியடைவான்...."*

*(அஸ்ஸுமர் 39 : 7)*

*"எனினும் (உம்முடன்) நிராகரிப்போர் புறப்பட்டு வருவதை அல்லாஹ் வெறுத்து விட்டான். மேலும் அவர்கள் புறப்படாது*

*தடை செய்துவிட்டான். ஆகவே (வீட்டில்) தங்குவோருடன் நீங்களும் தங்கிவிடுங்கள் என்று (அவர்களுக்குக்) கூறப்பட்டு விட்டது.” (அத்தவ்பா 9 : 46)*

**நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்பவர்களை அல்லாஹ் நேசிக்கிறான். மேலும் அவர்களைக் கொண்டு அவன் திருப்தி அடைகிறான்; மகிழ்ச்சி அடைகிறான்.**

*“அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி திருப்தி அடைந்தான். அவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தி அடைந்தார்கள். எவர் தன் இறைவனுக்குப் பயப்படுகிறாரோ அவருக்குத்தான் இத்தகைய பாக்கியம் கிடைக்கும்.” (அல்பய்யினா 98 : 8)*

**நிராகரிப்பாளர்கள் மற்றும் கோபத்துக்குத் தகுதியானவர்களை அல்லாஹ் கோபிக்கிறான்.**

“அல்லாஹ்வைப் பற்றி கெட்ட எண்ணம் கொள்ளும் நயவஞ்சகமுள்ள ஆண்களையும் பெண்களையும் இணை வைத்து வணங்கும் ஆண்களையும் பெண்களையும் (அல்லாஹ்) வேதனை செய்தே தீருவான். வேதனை அவர்கள் (தலைக்கு) மேல் சூழ்ந்து கொண்டு இருக்கின்றது. அல்லாஹ் அவர்கள் மீது கோபப்பட்டான்; அவர்களைச் சபித்தான்; அவர்களுக்காக நரகத்தையும் தயார்படுத்தி வைத்திருக்கிறான். அது செல்லுமிடங்களில் மகா கெட்டது.” (அல் ஃபத்ஹ் 48 : 6)

“எனினும் எவன் உள்ளத்தால் தெளிவாக நிராகரித்துவிட்டானோ அவன் மீது அல்லாஹ்வுடைய கோபம்தான் ஏற்படும்; அவனுக்கு மகத்தான வேதனையும் உண்டு.” (அன்னஹ்ல் 16 : 106)

**அல்லாஹ்வுக்கு கண்ணியமும் சங்கைமிக்க முகம் இருக்கிறது.**

"*மிக கண்ணியமும் சங்கையுமிக்க உமது இறைவனின் முகம் மட்டும் அழியாது நிலைத்திருக்கும்.*" *(அர்ரஹ்மான் 55 : 27)*

**அல்லாஹ்வுக்கு கண்ணிய மிக்க மகத்தான இரு கரங்கள் இருக்கின்றன.**

"*அல்லாஹ்வுடைய இரு கைகள் விரிந்தே இருக்கின்றன. அவன் நாடியவாறெல்லாம் (அள்ளி) அள்ளிக் கொடுக்கின்றான்.*"

*(அல்மாயிதா 5 : 64)*

"*(நபியே!) அல்லாஹ்வின் (மேலான) தகுதிக் குத்தக்கவாறு அவனை அவர்கள் கண்ணி யப்படுத்துவதில்லை. பூமி (இவ்வளவு பெரி தாக இருந்தபோதிலும் அது) முழுவதும் மறுமையில் அவனுடைய ஒரு கையிலும் வானங்கள் அனைத்தும் சுருட்டப்பட்டு*

*அவனுடைய வலது கையிலும் இருக்கும். இவர்கள் இணைவைப்பதை விட்டு அவன் மிக மேலானவன்; அவன் மிகப் பரிசுத்த மானவன்.”* ***(அஸ்ஸுமர் 39 : 67)***

## அல்லாஹ்வுக்கு இரு கண்கள் உண்டு.

“*(நூஹே!) நாம் அறிவிக்குமாறு நம்முடைய கண்கள் முன்பாகவே நீர் ஒரு கப்பலை செய்யும்.”* ***(ஹூது 11 : 37)***

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: “அல்லாஹ்வின் திரை ஒளியாகும். அதை அவன் திறந்தால் அவனது படைப்புகளில் அவனது பார்வை எதுவரை செல்லுமோ அவை அனைத்தையும் அவனது முகத்தின் ஒளிகள் எரித்துவிடும்.”
(ஸஹீஹ் முஸ்லிம் - 293)

அல்லாஹ்வின் கண்கள் இரண்டு என்பதை நபி ﷺ அவர்களின் கூற்று உறுதிப்படுத்துகிறது. நபி ﷺ அவர்கள் தஜ்ஜாலின் விஷயத்தில்

கூறினார்கள்: "நிச்சயமாக அவன் ஒற்றைக் கண்ணன். உங்களது இறைவன் ஒற்றைக் கண்ணன் அல்லன்."

(ஸஹீஹுல் புகாரி - 7407, 7408, 7123)

**அவனை இவ்வுலகத்தில் யாரும் பார்க்க முடியாது.**

*"எவருடைய பார்வையும் அவனை அடையாது. அவனோ அனைத்தையும் பார்க்கிறான். அவன் (எவரின் பார்வைக்கும் அகப்படாத) நுட்பமானவன்; அனைத்தையும் அறிந்தவன்." (அல்அன்ஆம் 6 : 103)*

**நம்பிக்கையாளர்கள் மறுமையில் அல்லாஹ்வைக் காண்பார்கள்.**

*"மறுமை நாளில் நம்பிக்கையாளர்களின் முகங்கள் மிக்க மகிழ்ச்சியுடையவையாக இருக்கும். தங்கள் இறைவனை நோக்கிய*

*வண்ணமாக இருக்கும்.”*

*(அல்கியாமா 75 : 22, 23)*

**அல்லாஹ்வின் தன்மைகள் நிறைவானது; முழுமையானது. எனவே, அவனுக்கு ஒப்பாக எதுவுமில்லை.**

*“அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை அவன் (அனைத்தையும்) செவியுறுவோனாகவும் உற்று நோக்கியவனாகவும் இருக்கிறான்.” (அஷ்ஷுரா 42 : 11)*

அல்லாஹ் என்றும் உயிரோடு இருப்பவன்; நிலைத்திருப்பவன். எனவே,

*“...அவனைச் சிறு தூக்கமும் பெரும் உறக்கமும் பீடிக்காது.”(அல்பகரா 2 : 255)*

**அல்லாஹ் மிக நீதம் செலுத்துபவனாக இருக்கிறான். எனவே, அவன் யாருக்கும் அநீதமிழைக்க மாட்டான்.**

அல்லாஹ் தனது அடியார்களின் செயல் களிலிருந்து பராமுகமாக இருக்கமாட்டான். ஏனெனில், அவன் அடியார்களை நன்கு கவனித்தவனாகவும் அவர்களை முழுமை யாகச் சூழ்ந்தவனாகவும் இருக்கிறான்.

அவன் மிக்க அறிந்தவனாகவும் முழுமை யான ஆற்றலுடையவனாகவும் இருப்பதால் வானம், பூமியில் உள்ள எதுவும் அவனை இயலாமையில் ஆழ்த்திவிட முடியாது.

*“அவன் ஏதேனுமொரு பொருளை(ப் படைக்க)க் கருதினால், அதனை ‘ஆகுக!’ எனக் கூறுவதுதான். உடன் அது ஆகிவிடு கின்றது.” (யாஸீன் 36 : 82)*

அவன் முழுமையான ஆற்றல் பெற்றவன். எனவே, அவனுக்குக் களைப்போ, சிரமமோ அறவே ஏற்படாது.

*“நிச்சயமாக நாம்தான் வானங்களையும்*

*பூமியையும் அதற்கு மத்தியிலுள்ளவற்றை யும் ஆறே நாட்களில் படைத்தோம். (அதில்) நமக்கு எவ்வித களைப்பும் ஏற்பட்டு விடவில்லை." (காஃப் 50 : 38)*

எந்தப் பெயர்கள் மற்றும் பண்புகள் தனக்கு உண்டு என அல்லாஹ் உறுதி செய்தானோ அல்லது நபி ﷺ அவர்கள் பெயர்கள் மற்றும் பண்புகளில் அல்லாஹ்விற்கு எவை உண்டென உறுதி செய்தார்களோ அவை அனைத்தும் அல்லாஹ்விற்கு உண்டு.

அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி பேசும் போது இரண்டு விஷயங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

1. **"தம்ஸீல்"** - உவமை கற்பிப்பது: அதாவது, வாயாலோ உள்ளத்தாலோ, அல்லாஹ்வின் பண்புகளில் ஏதேனும் ஒரு பண்பு படைப்பினங் களின் பண்பைப் போல இருக்கிறது என்று கூறுவது.

2. **“தக்யீஃப்”** - தன்மையை விவரிப்பது: அதாவது, அல்லாஹ்வுடைய பண்புகளின் தன்மை இவ்வாறானது, இப்படிப்பட்டது என்று கூறுவது.

ஆகவே அல்லாஹ்வின் பண்புகளுக்கு உவமை கற்பிப்பதோ அவற்றின் தன்மையை விவரிப்பதோ அறவே கூடாது.

எந்த பண்புகள் தன்னிடம் இல்லை என அல்லாஹ் மறுத்தானோ, அல்லது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்விடம் எந்தப் பண்புகள் இல்லை என மறுத்தார்களோ அவை அனைத்தும் அல்லாஹ்விடம் அறவே இல்லை. ஏனெனில், இவ்வாறு இல்லை என்று மறுப்பது, அதற்கு முரண்பட்ட தன்மைகள் அல்லாஹ் விடம் உண்டு என ஏற்றுக் கொள்வதாகும். அந்தத் தன்மைகள்தான் அல்லாஹ்விற்கு நிறைவானவையாகவும் குறையற்றவையாகவும் அமையும்.

அல்லாஹ்வும் அவனது தூதரும் எந்த விஷயத்தைப் பற்றி விவரம் கூறவில்லையோ அவற்றைப் பற்றி நாமும் மவுனம் காக்க வேண்டும்.

அல்லாஹ் தன்னிடம் இருப்பதாகக் கூறிய தன்மைகள், அல்லது இல்லை என்று மறுத்த விஷயங்கள் அனைத்தும் அல்லாஹ் தன்னைப் பற்றி சொன்ன செய்திகளாகும். அவன் தன்னைப் பற்றி நன்கறிந்தவன்; உண்மையே உரைப்பவன்; பேச்சில் மிக அழகானவன். அடியார்களாகிய நாம் அல்லாஹ்வை முழுமையாக அறியமுடியாது. எனவே, அவன் தன்னைப் பற்றி கூறியதை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அவ்வாறே நபி ﷺ அவர்கள் எந்தப் பண்பு களை அல்லாஹ்வுக்கு இருப்பதாக அல்லது இல்லை என்பதாக கூறினார்களோ அவை நபியவர்களுக்கு அல்லாஹ்வால் அறிவிக்கப்

பட்ட செய்திகளாகும். நபி ﷺ அவர்கள் மனிதர் களில் அல்லாஹ்வை மிகவும் அறிந்தவர்; அவனுக்கு நன்மையை நாடுபவர்; மிக உண்மை யாளர்; தெளிவாகப் பேசுபவர். ஆகவே அல்லாஹ் மற்றும் அவனது தூதர் கூறியதில் தான் முழுமையான அறிவும் உண்மையும் தெளிவும் இருக்கிறது. எனவே, அதை மறுப்ப தற்கோ அதை ஏற்றுக்கொள்வதில் தாமதிப்ப தற்கோ எக்காரணத்தையும் கூறக் கூடாது.

அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி எந்தப் பண்பு அவனுக்கு உண்டு, எந்தப் பண்பு அவனுக்கு இல்லை என்று அவனைப் பற்றி விரிவாகவும் சுருக்கமாகவும் இதுவரை கூறப்பட்டதோ, அந்த அனைத்து விஷயங்களிலும் நாம் அல்லாஹ்வின் வேதமாகிய குர்ஆனையும் அவனது நபி ﷺ அவர்களின் வழிமுறையையும் சார்ந்தே இருக்கிறோம். இது விஷயத்தில் நமது (ஸலஃப் ஸாலிஹீன்) சிறப்பிற்குரிய

முன்னோர்களும் நேர்வழி பெற்ற இமாம்களும் நடந்த வழியிலேயே நாமும் நடக்கிறோம்.

இது விஷயத்தில் குர்ஆன், ஹதீஸின் வசனங்களுக்கு அதன் வெளிப்படையான அர்த்தத்தைக் கொள்வதும், அதில் கூறப்பட்ட கருத்துகளை அல்லாஹ்வின் தகுதிக்குத் தக்கவாறு அதன் நேரடி அர்த்தத்திலேயே கையாள்வதும் அவசியமாகும்.

அல்லாஹ்வின் தன்மைகள் பற்றி வந்துள்ள குர்ஆன் மற்றும் ஹதீஸின் வாசகங்களுக்கு அல்லாஹ்வும் அவனது தூதரும் நாடிய அர்த்தங்களுக்கு மாற்றமான அர்த்தம் கொள்பவர்கள்; அல்லாஹ்வும் அவனது தூதரும் நாடிய கருத்துகளை மறுப்பவர்கள்; அல்லாஹ்வுடைய தன்மைகளுக்கு உவமானம் கூறுபவர்கள்; அல்லாஹ்வுடைய தன்மைகளின் அமைப்பை விவரிப்பவர்கள் ஆகிய அனைவரிடமிருந்தும் நாம் முற்றிலும் விலகி இருக்கவேண்டும்.

அல்குர்ஆனிலும் நபி ﷺ அவர்களின் (ஸுன்னா) வழிமுறையிலும் வந்தவை அனைத்தும் உண்மையாகும். அவற்றில் ஒன்று மற்றொன்றுக்கு முரண்படாது.

*"இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து வந்திருந்தால் இதில் அநேக (தவறுகளையும்) முரண்பாடு களை(யும்) அவர்கள் கண்டிருப்பார்கள்."*
*(அன்னிஸா 4 : 82)*

ஏனெனில், செய்திகளில் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பது ஒன்றையொன்று பொய்ப்படுத்துவதாக அமையும். இது அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் செய்திகளில் இருப்பது சாத்தியமற்றதாகும்.

அல்குர்ஆனில் அல்லது நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் முரண்பாடுகள் இருப்பதாகக் கூறுபவர்கள்; அல்லது அல்குர்ஆனுக்கும்

ஆதாரமிக்க ஹதீஸ்களுக்கு மிடையில் முரண்பாடு இருக்கிறது என வாதிப்பவர்கள் தீய சிந்தனையும் வழிகெட்ட உள்ளத்தையும் உடையவர்களாவர். இத்தகையோர் உடனடி யாக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக்கோரி தங்களது அசத்திய வாதத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

அல்குர்ஆனில் முரண்பாடுகள் இருக்கின்றன அல்லது நபிமொழிகளில் முரண்பாடுகள் இருக்கின்றன அல்லது அல்குர்ஆனுக்கும் ஹதீஸ்களுக்குமிடையில் முரண்பாடுகள் இருக்கின்றன என்று எவரேனும் வாதிட்டால், அதற்கு காரணம் அவர்களின் எண்ணமும் உள்ளமும் கெட்டுக் கோணலாகி விட்டதைத் தவிர வேறொன்றும் இல்லை. இவர்கள் தங்களுக்கு சத்தியம் தெளிவாகும் வரை ஆழ்ந்து சிந்திக்கட்டும்; அதன் விளக்கத் தைத் தேடட்டும். அப்படியும் சத்தியம் புலப் படவில்லையென்றால் கல்வியில் சிறந்தவர்

**களிடம் அவ்விஷயத்தை ஒப்படைத்து விடட்டும்.**

**அவர்கள் கூறும் கருத்தை ஏற்று, இறைச் சட்டங்களில் முரண்பாடு இருப்பதாக சந்தே கிப்பதிலிருந்து விலகிக் கொள்ளட்டும். பிறகு கல்வியில் சிறந்தவர்கள் கூறியது போன்று கூறி விடட்டும்!**

கல்வியில் சிறந்தவர்கள் கூறுவார்கள்:

*“இதனையும் நாங்கள் நம்பிக்கை கொண் டோம். அனைத்தும் எங்கள் இறைவனிட மிருந்து வந்தவைதான்.”*

*(ஆலு இம்ரான் 3 : 7)*

**ஆகவே அல்குர்ஆனிலும் நபி மொழியிலும் எவ்வித முரண்பாடோ வேற்றுமையோ கிடையாது. அவ்வாறே அவ்விரண்டுக்கும் மத்தியிலும் எவ்வித முரண்பாடோ வேற்றுமையோ கிடையாது.**

------

## மலக்குகள் (வானவர்கள்)

**மலக்குகள் - வானவர்கள் உண்டென நம்பிக்கைகொள்ள வேண்டும்.**

*அவர்கள் (மலக்குகள்) கண்ணியமிக்க அடியார்கள். அவனை (அல்லாஹ்வை) மீறி அவர்கள் எந்த வார்த்தையும் பேச மாட்டார்கள். அவன் இட்ட கட்டளையை அவர்கள் செய்து கொண்டிருப்பார்கள். (அல்அன்பியா 21 : 26, 27)*

அல்லாஹ்வே அவர்களைப் படைத்தான். அவனையே அவர்கள் வணங்கி வருகிறார்கள். மேலும், அவனது கட்டளைகளுக்கு முற்றிலும் அடிபணிகிறார்கள்.

*அவர்கள் அவனை வணங்காது பெருமை கொள்ளவும் மாட்டார்கள்; சோர்வுறவும் மாட்டார்கள். அவர்கள் இரவு பகல் எந்நேரமும் அவனைத் துதி செய்து*

*போற்றிக் கொண்டேயிருக்கின்றனர்.*

*(அல்அன்பியா 21 : 19, 20)*

நமது பார்வையிலிருந்து அல்லாஹ் அவர்களை மறைத்து வைத்துள்ளான்; நாம் அவர்களைக் காண முடியாது. சில சந்தர்ப்பங்களில் தனது அடியார்களில் சிலருக்கு மட்டும் அவர்களை வெளிப்படுத்திக் காட்டுவான்.

ஜீப்ரீலை நபி ﷺ அவர்கள் பார்த்தார்கள். அவருக்கு 600 இறக்கைகள் இருந்தன.

(ஸஹீஹுல் புகாரி - 3232, 4856)

*ஈஸா (அலை) அவர்களின் தாயார் மர்யமிடம் திடமான மனித உருவில் ஜீப்ரீல் (அலை) காட்சியளித்தார்; இருவரும் உரை யாடிக் கொண்டார்கள்.*

*(மர்யம் 19 : 16-21)*

நபி ﷺ அவர்கள் தங்களது தோழர்களுடன் அமர்ந்து இருந்த போது அந்தச் சபைக்கு ஜீப்ரீல்

(அலை) மனித உருவில் பயணக்களைப்பு இல்லாதவராக, தூய வெண்மை நிற உடையில், மிகவும் கருத்தமுடி உடையவராக வந்து நபி ﷺ அவர்களிடம் அமர்ந்தார். நபியவர்களின் முட்டுக்காலுடன் தனது முட்டுக்காலை இணைத்து வைத்து தனது இரு கைகளையும் தமது தொடைகளின் மீது வைத்தார். பிறகு இருவரும் பேசிக் கொண்டார்கள். அவர் சென்ற பிறகு "வந்தவர் ஜீப்ரீல் (அலை)" என நபியவர்கள் தோழர்களிடம் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி 50, ஸஹீஹ் முஸ்லிம் 4777)

## மலக்குகளில் சிலருக்குச் சில செயல்களை அல்லாஹ் பணித்துள்ளான்.

ஜீப்ரீல் (அலை) அவர்களுடைய பணியாவது, நபிமார்கள், ரஸூல்மார்களுக்கு வஹ்யி - அல்லாஹ்வின் செய்தியை எடுத்துரைப்பார்கள்.

மீகாயீல் (அலை) அவர்களுடைய பணி

அல்லாஹ்வின் அனுமதி கொண்டு மழை பொழிய வைப்பது; தாவரங்களை முளைக்க வைப்பதாகும். (தஃப்ஸீர் இப்னு கஸீர் 1/135, 136)

இஸ்ராஃபீல் (அலை) அவர்களுடைய பணி உலகம் அழியும் நேரத்திலும் அனைத்துப் படைப்பினங்கள் உயிர்கொடுத்து எழுப்பப்படும் நேரத்திலும் “சூர்’ ஊதுவதாகும்.

(ஜாமிவுத் திர்மிதி)

*“மலக்குல் மவுத்” மரண நேரத்தில் உயிரைக் கைப்பற்றுபவர். (அஸ்ஸஜ்தா 32 : 11)*

“மலக்குல் ஜிபால்” மலைகளுக்கு என நியமிக்கப்பட்டவர்.

(ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்)

*“மாலிக்’’ நரகத்தின் பாதுகாவலர்.*

*(அஸ்ஸுக்ருஃப் 43 : 77)*

இவை அல்லாமல் சில வானவர்கள் கர்ப்பத்தில் உள்ள சிசுக்களுக்காகவும் சில வானவர்கள்

மனிதர்களைப் பாதுகாப்பதற்காகவும் சில வான வர்கள் மனிதர்களின் செயல்களை எழுதுவதற் காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மனிதனிடமும் இரண்டு மலக்குகள் உள்ளனர்.

*வலது புறத்தில் ஒருவரும் இடது புறத்தில் ஒருவருமாக இருவர் (அவன் செய்யும் செயலைக்) குறிப்பெடுத்துக் கொண்டிருக் கின்றனர். (மனிதன்) எதைக் கூறிய போதி லும் அதனை எழுதக் காத்துக் கொண்டி ருக்கும் ஒருவர் அவனிடம் இல்லாம லில்லை."* *(காஃப் 50 : 17, 18)*

மற்றொரு பிரிவினர் மனிதர்கள் இறந்து மண்ண றையில் அடக்கம் செய்யப்பட்ட பிறகு கேள்வி கணக்கு கேட்கப் பணிக்கப்பட்டுள்ளனர். அல்லாஹ், அவனது மார்க்கம் மற்றும் நபியைப் பற்றி மனிதனிடம் கேள்வி கேட்பார்கள்.

*"எவர்கள் இறைநம்பிக்கை கொள்கிறார்*

*களோ, அவர்களை மறுமையிலும் சரி, இம்மையிலும் சரி, (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் இல்லை என்ற) மெய்யான இந்த வாக்கில் அல்லாஹ் உறுதிப்படுத்துகிறான். அக்கிரமக்காரர் களை (அவர்களுடைய பாவத்தின் காரண மாக) தவறான வழியில் அல்லாஹ் விட்டு விடுகிறான். அல்லாஹ் நாடியதைச் செய்கிறான்." (இப்றாஹீம் 14 : 27)*

## மலக்குகளில் சுவனவாசிகளுக்காகப் பணிக் கப்பட்டவர்களும் இருக்கிறார்கள்

*"நிலையான சுவனபதிகளில் இவர்களும் நன்னடத்தையுடைய இவர்களுடைய தந்தைகளும் இவர்களுடைய மனைவிகளும் இவர்களின் சந்ததிகளும் நுழைந்து விடு வார்கள். ஒவ்வொரு வாசலிலும் மலக்குகள் இவர்களிடம் வந்து, (இவர்களை நோக்கி) "நீங்கள் (உங்கள் வாழ்க்கையில் கஷ்டங்*

*களைப்) பொறுமையுடன் சகித்துக் கொண்டதன் காரணமாக உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக! (உங்களுடைய இந்தக்) கடைசி வீடு மிக்க நல்லதாயிற்று" (என்று கூறுவார்கள்). (அர்ரஅது 13 : 23, 24)*

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக வானத்தில் "அல் பைத்துல் மஃமூர்' எனும் ஆலயம் உள்ளது. ஒவ்வொரு நாளும் அதனுள் எழுபதாயிரம் மலக்குகள் நுழைகிறார்கள். (மற்றோர் அறிவிப்பில் அதில் தொழுகிறார்கள்.) பின்பு அதிலிருந்து அவர்கள் வெளியேறிய பிறகு அதற்கு திரும்ப வருவதே இல்லை." (ஸஹீஹுல் புகாரி - 3207)

------------

# நூல்கள் (வேதங்கள்)

அகிலத்தாருக்கு தன் ஆதாரத்தை நிலை நிறுத்துவதற்காக தூதர்கள் மீது நூல்களை அல்லாஹ் இறக்கி வைத்தான். அதன் மூலம் நபிமார்கள், மனிதர்களுக்கு கல்வியையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்தார்கள்; அவர் களைத் தீயவற்றிலிருந்து பரிசுத்தப்படுத்தி னார்கள்.

## அல்லாஹ் ஒவ்வொரு ரஸூலுக்கும் ஒரு நூலைக் கொடுத்துள்ளான்

*“நாம் நம்முடைய ரஸூல்களை (தூதர் களை)த் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டே அனுப்பி வைத்தோம். அத்துடன் மனிதர்கள் நீதமாக நடந்து கொள்வதற்காக அவர்களுக்கு நூலையும் தராசையும் கொடுத்தோம்.”*

*(அல்ஹதீது 57 : 25)*

இந்த நூல்களில் நாம் அறிந்தவை:

1. "**தவ்றாத்**" - இது மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அருளிய நூலாகும். இஸ்ரவேலர்களுக்கு வழங்கப்பட்ட நூல்களில் மிக மகத்தான நூலாகும்.

*"'தவ்றாத்'தையும் நிச்சயமாக நாம்தான் இறக்கி வைத்தோம். அதில் நேர்வழியும் இருக்கின்றது; பிரகாசமும் இருக்கின்றது. (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்டு நடந்த நபிமார்கள், அதனைக் கொண்டே யூதர்களுக்கு (மார்க்க)க் கட்டளையிட்டு வந்தார்கள். அவர்களுடைய (பண்டிதர்களாகிய) ரிப்பிய்யூன்களும், (குருமார்களாகிய) அஹ்பார்களும், அல்லாஹ்வுடைய நூலைக் காப்போர் என்ற முறையில், (அதனைக் கொண்டே தீர்ப்பளித்து வந்தார்கள். மேலும் இவர்கள்) அதற்குச் சாட்சிகளாகவும் இருந்தார்கள்." (அல்மாயிதா 5 : 44)*

2. **"இன்ஜீல்"** - இது ஈஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அருளிய நூலாகும். இந்த நூல் தவ்றாத்தை உண்மைப்படுத்தியது; அதை முழுமைப்படுத்தியது.

*"(முன்னிருந்த நபிமார்களாகிய) அவர்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமுடைய மகன் ஈஸாவையும் நாம் அனுப்பி வைத்தோம். அவர் தன் முன் இருந்த தவ்றாத்தை உண்மையாக்கி வைப்பவராக இருந்தார். மேலும், இன்ஜீல் என்னும் நூலையும் நாம் அருளினோம். அதிலும் நேர்வழி மற்றும் பிரகாசம் இருக்கின்றன. அது தன் முன்னுள்ள தவ்றாத்தை உண்மையாக்கி வைக்கின்றது. இறை அச்சமுடையோருக்கு அது நேர்வழி காட்டக்கூடியதாகவும் நல்லுபதேசமாகவும் இருக்கின்றது."*

*(அல்மாயிதா 5 : 46)*

*"என் முன் இருக்கும் தவ்றாத்தை(யும்)*

*நான் உண்மையாக்கி வைத்து (முன்னர்) உங்களுக்கு விலக்கப்பட்டவற்றில் சில வற்றை உங்களுக்கு ஆகுமாக்கி வைப்பதற் காகவும், உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து என்னைப் பின்பற்றுங்கள்." (ஆலு இம்ரான் 3 : 50)*

**3. "ஜபூர்"** - இது நபி தாவூத் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அருளிய நூலாகும்.

*தாவூதுக்கு 'ஜபூரை' நாமே கொடுத்தோம். (அன்னிஸா 4 : 163)*

4. இப்றாஹீம் (அலை) அவர்களுக்கும் மூஸா (அலை) அவர்களுக்கும் அல்லாஹ் சில நூல் களைக் கொடுத்தான்.

*"மறுமையின் வாழ்க்கைதான் மிக்க மேலான தும் நிலையானதுமாகும். நிச்சயமாக இது*

*முன்னுள்ள நூல்களிலும், இப்றாஹீம், மூஸாவுடைய நூல்களிலும் இருக்கின்றது."* *(அல்அஃலா 87 : 17-19)*

இறுதி நபியான முஹம்மது ﷺ அவர்களுக்குச் சங்கை மிக்க **"குர்ஆனை"** அல்லாஹ் இறக்கி வைத்தான்.

*"ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவ முடைய)தென்றால் அதில்தான் அல்குர்ஆன் அருளப்பெற்றது. அது மனிதர்களுக்கு நேர் வழி காட்டியாகவும் (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடியதாகவும் இருக்கிறது."* *(அல்பகரா 2 : 185)*

*"இது தனக்கு முன்னுள்ள (மற்ற) நூல்களையும் உண்மையாக்கி வைக்கின்றது. இன்னும் அவற்றைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது."* *(அல்மாயிதா 5 : 48)*

எனவே, அல்லாஹ் இந்தக் குர்ஆனின் மூலம் இதற்கு முன்னுள்ள நூல்கள் அனைத்தையும் மாற்றி (ரத்து செய்து) விட்டான். அத்துடன் இந்தக் குர்ஆனில் திருத்தம் செய்வது மற்றும் (முந்திய நூல்களில் நடந்தது போன்று) மனிதக் கரங்கள் விளையாடுவது ஆகியவற்றை விட்டும் பாதுகாப்பதாக அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டான்.

“*நிச்சயமாக நாம்தான் இந்த நினைவூட்டலை (உம்மீது) இறக்கி வைத்தோம். ஆகவே, (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே அதனைப் பாதுகாத்துக் கொள்வோம்.*”

*(அல்ஹிஜ்ர் 15 : 9)*

ஏனெனில், இந்தக் குர்ஆன்தான் இறுதிநாள் வரை அனைவர் மீதும் அல்லாஹ்வின் ஆதாரமாக நிலைத்திருக்கும்.

முந்திய நூல்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இறக்கப்பட்டவை. அடுத்து ஒரு நூல் இறக்கப்படும்போது முந்திய நூல் ரத்தாகி விடும். பிந்திய நூல் முந்திய நூலில் மக்கள் ஏற்படுத்திய கூடுதல் குறைவுகளைத் தெளிவு படுத்திவிடும். ஆகவே, முந்திய நூல்களில் எதுவும் பாதுகாக்கப்படவில்லை. கூடுதல், குறைத்தல், மாற்றங்கள் போன்றவை அவற்றில் நிகழ்ந்து கொண்டே இருந்தன.

*"யூதர்களில் சிலர் (இறை) வசனங்களைக் கருத்துவேறு படும்படிப் புரட்டி வருகின்றனர்."* *(அன்னிஸா 4 : 46)*

*"எவர்கள் தங்கள் கையைக் கொண்டு (கற்பனையாக) எழுதிய புத்தகத்தை ஒரு சொற்பக் கிரயத்தை அடைவதற்காக 'இது அல்லாஹ்விடமிருந்து வந்ததுதான்' என்று கூறுகிறார்களோ அவர்களுக்குக் கேடுதான்! ஆகவே, அவர்களுடைய கைகள் எழுதிய*

*தாலும் அவர்களுக்குக் கேடுதான்! அவர்கள் (அதைக் கொண்டு பொருள்) சம்பாதிப் பதாலும் அவர்களுக்குக் கேடுதான்.”*

*(அல்பகரா **2 : 79**)*

“*(நபியே!) நீர் கேளும்: மனிதர்களுக்குப் பிரகாசத்தையும், நேர்வழியையும் தரக்கூடிய ('தவ்றாத்' என்னும்) நூலை மூஸாவுக்கு அருளியது யார்? நீங்கள் அந்த நூலைத் தனித்தனி ஏடுகளாகப் பிரித்து (அவற்றில்) சிலவற்றை வெளிப்படுத்துகிறீர்கள்; (உங்கள் நோக்கத்திற்கு மாறான) பெரும் பாலானவற்றை நீங்கள் மறைத்து விடுகிறீர்கள்.”* *(அல்அன்ஆம் **6 : 91**)*

“*நிச்சயமாக அவர்களில் ஒரு பிரிவினர் இருக்கின்றனர். (அவர்கள் இறைவனின்) நூலை ஓதும்போது (அத்துடன் பல வாக்கி யங்களைக் கலந்து அதுவும்) நூலிலுள்ளது தான் என நீங்கள் எண்ணிக் கொள்ளும்*

*பொருட்டு தங்கள் நாவைக் கோணி உளறு கின்றனர். எனினும், அது நூலிலுள்ளது அல்ல. அன்றி, அவர்கள் "அது அல்லாஹ் விடமிருந்து வந்தது" என்றும் கூறுகின்றனர். அது அல்லாஹ்விடமிருந்து வந்ததும் அல்ல. அவர்கள் நன்கறிந்து கொண்டே அல்லாஹ் வின் மீது இவ்வாறு பொய் கூறுகின்றனர். ஒரு மனிதருக்கு நூலையும் ஞானத்தையும் நபித்துவத்தையும் அல்லாஹ் கொடுத்த பின்னர் அவர் மனிதர்களை நோக்கி "அல்லாஹ்வை விடுத்து என்னை வணங்குங் கள்" என்று கூறுவதற்கில்லை."*

*(ஆலு இம்ரான் 3 : 78, 79)*

*"நூல் கொடுக்கப்பட்டவர்களே! உங்களி டம் நிச்சயமாக நம்முடைய ஒரு தூதர் வந்திருக்கிறார். நூலில் நீங்கள் மறைத்துக் கொண்ட அநேக விஷயங்களை, அவர் உங்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்*

பிக்கிறார். மற்றும் அநேக விஷயங்களை (அவர் அறிந்திருந்தும் உங்களுக்கு கேவலம் உண்டாகாதிருக்கும் பொருட்டு அவற்றைக் கூறாது) விட்டு விடுகின்றார். நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பிரகாசமும் தெளிவு முள்ள ஒரு நூல் (இப்போது) உங்களிடம் வந்திருக்கின்றது.

(உங்களில்) எவர்கள் அல்லாஹ்வின் திருப்தி யைப் பின்பற்றுகிறார்களோ அவர்களை அதன் மூலமாக, அல்லாஹ் சமாதானத்திற் குரிய வழியில் செலுத்துகிறான். மேலும், இருள்களிலிருந்தும் வெளிப்படுத்தி தன் அருளால் பிரகாசத்தின்பால் கொண்டு வருகிறான். தவிர, அவர்களை நேரான வழியில் செல்லும்படியும் செய்கிறான்.

எவர்கள் மர்யமுடைய மகன் மஸீஹை அல்லாஹ்தான் என்று கூறுகின்றனரோ அவர்கள் நிச்சயமாக (உண்மையை)

*நிராகரிப்பவர்களாகவே இருக்கின்றனர். ஆகவே (நபியே!) நீர் கூறும்: மர்யமுடைய மகன் மஸீஹையும் அவருடைய தாயையும் உலகத்திலுள்ள (மற்ற) அனைத்தையும் அல்லாஹ் அழித்துவிடக் கருதினால்; (அவனைத்தடுக்க) எவன் தான் சிறிதேனும் சக்தி பெறுவான்? (ஏனென்றால்,) வானங்கள், பூமி இன்னும் இவற்றுக்கு மத்தியில் உள்ள அனைத்தின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே! அவன் விரும்பியதைப் படைக்கிறான். அல்லாஹ் அனைத்தின் மீதும் மிக ஆற்றலுடையோனாக இருக்கிறான்."*

*(அல்மாயிதா 5 : 15, 16, 17)*

---------

# தூதர்கள்

அல்லாஹ் மனிதர்களுக்காகப் பல தூதர்களை அனுப்பி வைத்தான்.

*“அல்லாஹ்வின் மீது (குற்றம் கூற) மனிதர் களுக்கு யாதொரு ஆதாரமும் இல்லாதிருக் கும் பொருட்டு, இத்தூதர்களுக்குப் பின்ன ரும் (யஹ்யா போன்ற வேறு) பல தூதர் களை, (சொர்க்கத்தைப் பற்றி) நற்செய்தி கூறுகின்றவர்களாகவும் (நரகத் தைப்பற்றி) அச்சமூட்டி எச்சரிக்கின்றவர்களாகவும் (நாம் அனுப்பி வைத்தோம்). அல்லாஹ் (அனைவரையும்) மிகைத்தவனும், ஞானமு டையவனுமாக இருக்கின்றான்.”*

*(அன்னிஸா 4 : 165)*

**அந்தத் தூதர்களில் முதலாமவர் நூஹ் (அலை) ஆவார்கள். இறுதியானவர் முஹம்மது ﷺ ஆவார்கள்.**

*“(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின்னர் வந்த நபிமார்களுக்கும், நாம் வஹ்யி அறிவித்தவாறே உமக்கும், நிச்சயமாக நாம் வஹ்யி அறிவித்தோம். மேலும், இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஅகூப் ஆகியவர்களுக்கும், அவர்களுடைய சந்ததிகளுக்கும், ஈஸா, ஐயூப், யூனுஸ், ஹாரூன், ஸுலைமான் ஆகியோருக்கும் (இவ்வாறே) நாம் வஹ்யி அறிவித்திருக்கின்றோம். தாவூதுக்கு “ஐபூர்” என்னும் வேதத்தை நாமே கொடுத்தோம்.” (அன்னிஸா4 : 163)*

*“(நம்பிக்கையாளர்களே!) உங்களில் உள்ள ஆண்களில் ஒருவருக்கும் முஹம்மது தந்தையாக இருக்கவில்லை. எனினும், அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களில் இறுதியானவராகவும் இருக்கிறார்.” (அல்அஹ்ஸாப் 33 : 40)*

அவர்களில் மிகச் சிறந்தவர்கள் முஹம்மது

ﷺ, பிறகு இப்றாஹீம், பிறகு மூஸா, பிறகு நூஹ், பிறகு ஈஸா இப்னு மர்யம். (அலைஹி முஸ்ஸலாம்) இவர்கள் அனைவரும் பின்வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

“*(நபியே! நம்முடைய தூதை எடுத்துரைக் கும்படி பொதுவாக) நபிமார்களிடமும் (சிறப்பாக) உம்மிடமும், நூஹ், இப்றாஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸாவிடமும் வாக்குறுதி வாங்கிய சமயத்தை நினைத்துப் பாருங்கள். மிக்க உறுதியான வாக்குறுதியை இவர்களிடமும் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.*” *(அல்அஹ்ஸாப் 33 : 7)*

சிறப்பிற்குரிய இந்த ரஸூல்மார்களின் மார்க்கச் சட்ட அமைப்புகளிலுள்ள சிறப்புகள் அனைத்தையும் பெற்றதாக முஹம்மது ﷺ அவர்களின் மார்க்கச் சட்ட அமைப்பு (ஷரீஅத்) உள்ளது.

“*(நம்பிக்கையாளர்களே!) நூஹுக்கு எதனை*

*அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கி இருக்கின்றான். ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹ்யி மூலம் அறிவிப்பதும் இப்றாஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் உபதேசித்ததும் (என்ன வென்றால், நீங்கள் ஒருமித்து ஓரிறைக் கொள்கையுடைய உண்மையான) மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். அதில் (பல பிரிவுகளாகப்) பிரிவினை செய்து கொள்ளாதீர்கள் என்பதே ஆகும்." (அஷ்ஷூரா 42 : 13)*

**அனைத்து (ரஸூல்) தூதர்களும் அல்லாஹ்வால் படைக்கப்பட்ட மனித இனத்தவர்களே! அவர்களுக்கு அல்லாஹ்வின் இறைத் தன்மைகளில் எந்தத் தன்மையும் கிடையாது.**

இறைத் தூதர்களில் முதல் தூதரான நூஹ் (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

*“(நூஹ் தனது மக்களை நோக்கி கூறினார்,) அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கின்றன என்று நான் உங்களிடம் கூறவில்லை; நான் மறைவானவற்றை அறிந்தவனுமல்லன்; நான் ஒரு மலக்கு (வானவர்) என்றும் கூறவில்லை.”*

*(ஹூது 11 : 31)*

இறைத்தூதர்களில் இறுதித் தூதரான முஹம்மது ﷺ அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

*“(முஹம்மதே! நீர் அவர்களை நோக்கி கூறும்) அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கிறதென்று நான் உங்களுக்குக் கூறவில்லை. மறைவானவற்றை நான் அறியவும் மாட்டேன். உண்மையாகவே நான் ஒரு மலக்கு என்றும் நான் உங்களிடம் கூறவில்லை.” (அல்அன்ஆம் 6 : 50)*

*“நீர் கூறும்: அல்லாஹ் நாடினால் தவிர*

*எனக்கு எந்த நன்மையும் தீமையும் செய்து கொள்ள நான் சக்திபெறமாட்டேன்."*

*(அல்அஃராஃப் 7 : 188)*

*"உங்களுக்கு நன்மையோ தீமையோ செய்ய நிச்சயமாக ஒரு சிறிதும் சக்தியற்றவன் நான் என்றும் (நபியே) நீர் கூறுவீராக!"*

*(அல்ஜின்னு 72 : 21)*

**இறைத்தூதர்களும் அல்லாஹ்வின் அடியார்கள்தாம். அவர்களும் படைக்கப்பட்டவர்களே. ஆனால், இறைத்தூதர்களை 'ரிஸாலத்' எனும் தூதுத்துவத்தைக் கொண்டு மற்ற மனிதர்களைப் பார்க்கிலும் அல்லாஹ் மேன்மைப்படுத்தி உள்ளான்.**

அல்லாஹ் அவர்களை உயர்வாகப் பேசும் போதும் அவர்களின் சிறப்பை விவரிக்கும் போதும் அவர்களைத் தனது அடிமைகள், அடியார்கள் என்றே குறிப்பிடுகிறான்.

அவர்களில் முதலாமவரான நூஹ் (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

*“நூஹ்வுடன் நாம் (கப்பலில்) சுமந்தவர்களின் சந்ததிகளே! அவர் நிச்சயமாக (அதற்கு) மிக்க நன்றி செலுத்தும் அடிமையாகவே இருந்தார்.”* ***(பனீ இஸ்ராயீல் 17 : 3)***

அவர்களில் இறுதியானவரான முஹம்மது ﷺ அவர்கள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

*“(நன்மை தீமைகளைத் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இந்நூலை தன் அடிமை (முஹம்மது ﷺ) மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன். இது உலகத்தார் அனைவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதாக இருக்கின்றது.”*

***(அல்ஃபுர்கான் 25 : 1)***

ஏனைய ரஸூல்மார்கள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

*“(நபியே!) நமது அடியார்கள் இப்ராஹீம், இஸ்ஹாக், யஅகூபையும் நினைத்துப் பாருங்கள். இவர்கள் கொடையாளிகளாக வும், அகப்பார்வை உடையவர்களாகவும் இருந்தார்கள்.”* *(ஸாது 38 : 45)*

*“மிக பலசாலியாகிய நமது அடிமை தாவூதை நினைத்துப் பாரும்! நிச்சயமாக அவர் (எத்தகைய கஷ்டத்திலும்) நம்மையே நோக்கி நின்றார்.”* *(ஸாது 38 : 17)*

*“தாவூதுக்கு, ஸுலைமானை நாம் (மகனாகத்) தந்தருள் புரிந்தோம். அவர் சிறந்த அடிமையாக இருந்தார். நிச்சயமாக அவர் அனைத்திலும் (நம் பக்கமே) திரும் பக்கூடியவர்.”* *(ஸாது 38 : 30)*

நபி ஈஸாவைப் பற்றிக் குறிப்பிடுகிறான்:

*“அவரோ நாம் அருள்புரிந்த ஓர் அடிமையே தவிர வேறில்லை. இஸ்ராயீலின் சந்ததி*

*களுக்கு அவரை நாம் ஓர் உதாரண மாக்கினோம்.”* (அஸ்ஸுக்ருஃப் 43 : 59)

**அல்லாஹ் தூதுத்துவத்தின் தொடர்ச்சியை முஹம்மது ﷺ அவர்களின் தூதுத்துவத்தைக் கொண்டு நிறைவு செய்தான்; அவர்களை மனிதர்கள் அனைவருக்கும் ரஸூலாக - தூதராக ஆக்கினான்.**

இதையே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

“*(நபியே!) நீர் கூறும்: மனிதர்களே! (நீங்கள் எந்த நாட்டவராயினும், எவ்வகுப் பாராயினும்) நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வுடைய தூதரா வேன். வானங்கள் பூமியின் ஆட்சி அவனுக்குரியதே! வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு ஒருவருமில்லை. அவனே உயிர்ப்பிக்கிறான்; மரணிக்கும்படி செய்கிறான். ஆகவே (மக்களே!) அந்த*

*அல்லாஹ்வையும், எழுதப்படிக்க அறியாத அவனுடைய இத்தூதரையும் நீங்கள் நம்பிக்கை கொள்வீர்களாக! அவரும் அல்லாஹ்வையும் அவனுடைய வசனங்களையும் நம்பிக்கை கொள்கிறார். ஆகவே, நீங்கள் நேரான வழியை அடையும் பொருட்டு அவரையே பின்பற்றுங்கள்.”*

*(அல்அஃராஃப் 7 : 158)*

இஸ்லாமை முஹம்மது ﷺ அவர்களுக்கு அல்லாஹ் மார்க்கமாக ஆக்கினான். அதையே தனது அடியார்களுக்கும் மார்க்கமாகப் பொருந்திக் கொண்டான். அது அல்லாத எந்த மார்க்கத்தையும் யாரிடமிருந்தும் அவன் ஏற்க மாட்டான்.

*“நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம், இஸ்லாம்தான்.”*

*(ஆலு இம்ரான் 3 : 19)*

*“இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைப் பரிபூரணமாக்கி வைத்துவிட்டேன், என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமைப்படுத்தி விட்டேன். உங்களுக்கு இந்த இஸ்லாமை மார்க்கமாக பொருந்திகொண்டேன்.”*

*(அல்மாயிதா 5 : 3)*

*“இஸ்லாமைத் தவிர (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராகவே இருப்பார்.”*

*(ஆலு இம்ரான் 3 : 85)*

இஸ்லாமைத் தவிர யூத, கிறிஸ்துவ அல்லது வேறு மதங்களில் எந்த ஒன்றையாவது அல்லாஹ்விடம் ஒப்புக் கொள்ளப்பட்டதாக எவர் கருதுகிறாரோ அவர் காஃபிர் - இறை நிராகரிப்பாளர் ஆவார். அல்லாஹ்விடம் பாவ

மன்னிப்புக் கேட்டு தனது கொள்கையிலிருந்து விலகவில்லையென்றால் இஸ்லாமிலிருந்து வெளியேறிவிடுவார். ஏனெனில், அவர் குர்ஆனின் மேற்கூறப்பட்ட வசனங்களை மறுத்தவராகி விடுகிறார். பிறகு, "முர்தத்து" மதம் மாறியவராக கருதப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுவார்.

நபி ﷺ அவர்கள் உலகின் அனைத்து மக்களுக்கும் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டார்கள் என்பதை நிராகரிப்பவன் அனைத்து தூதர்களையும் நிராகரித்தவனாகவே ஆவான். அவன் தனது சமூகத்துக்கு அனுப் பப்பட்ட தூதரை நம்பிக்கை கொண்டு அவரைப் பின்பற்றுவதாக தன்னைப்பற்றிக் கருதினாலும் சரியே. ஏனெனில், அல்லாஹ் கூறுகிறான்:

"*நூஹ்வுடைய மக்கள் நம்முடைய தூதர்களைப் பொய்யாக்கினார்கள்.*"

*(அஷ்ஷுஅரா 26 : 105)*

நூஹ் (அலை) அவர்களுக்கு முன் எந்த ரஸூலும் (தூதரும்) இல்லையென்றாலும் நூஹ் (அலை) அவர்களைப் பொய்யாக்கியவர்களை அனைத்து ரஸூல்மார்களையும் பொய் யாக்கியவர்களாகவே அல்லாஹ் கூறியுள்ளான்.

*“நிச்சயமாக எவர்கள், அல்லாஹ்வையும் அவனுடைய தூதர்களையும் நிராகரித்து விட்டு, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் இடையில் பிரிவினை செய்துவிடக் கருதி (தூதர்களில்) “சிலரை நம்பிக்கை கொள்வோம்; சிலரை நிராகரிப் போம்” எனவும் கூறி (நிராகரிப்புக்கும் நம்பிக்கைக்கும்) மத்தியில் ஒரு பாதையை ஏற்படுத்த விரும்புகின்றார்களோ இத்தகை யோர், நிச்சயமாக நிராகரிப்போர்தான். நிராகரிப்போருக்கு நாம், இழிவு தரும் வேதனையையே தயார்படுத்தி வைத்தி ருக்கின்றோம்.” (அன்னிஸா 4 : 150, 151)*

முஹம்மது ﷺ அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் இல்லை. அவர்களுக்குப் பின் தன்னை நபி என வாதிப்பவன்; அல்லது நபி என வாதிப்பவனை உண்மைப்படுத்துபவன் இஸ்லாமிலிருந்து வெளியேறி விடுவான். “காஃபிர்” மறுப்பாளன் ஆவான். ஏனெனில், அவன் அல்லாஹ்வையும் அவனது தூதரை யும் முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவையும் பொய்யாக்கியவனாவான்.

நபி ﷺ அவர்களுக்கு பிறகு நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் இருந்தார்கள். அவர்கள் நபி ﷺ அவர்களின் சமுதாயத்தினருக்கு கல்வி, ஏகத்துவ அழைப்புப் பணி மற்றும் முஸ்லிம்களை நிர்வகிப்பதற்கான அதிகாரம் போன்றவற்றில் நபி ﷺ அவர்களின் பிரதி நிதிகளாகச் செயல்பட்டார்கள்.

அந்தப் பிரதிநிதித்துவத்தில் மிகவும் தகுதியா னவர், சிறப்புக்குரியவர் அபூபக்ர் d அவர்

களாவர். அடுத்து உமர் இப்னு கத்தாப், அடுத்து உஸ்மான் இப்னு அஃப்ஃபான், அடுத்து அலீ இப்னு அபூதாலிப் ஆவர் (ரழியல்லாஹு அன்ஹும்). இந்த வரிசைப்படியே அவர்கள் நபியவர்களுக்குப் பிறகு கலீஃபாவாக பொறுப் பேற்பதற்குத் தகுதி பெற்றவர்களாக இருந்தார் கள். அவ்வாறே சிறப்பிலும் இதே வரிசை முறையில் இருந்தார்கள். அல்லாஹ்வின் ஞானம் முழுமையானது. எனவே, தலைமைக்கு அதிகம் தகுதிபெற்றவரும் சிறந்தவரும் இருக்கும்போது, அவரை விட தகுதியில் குறைந்தவரை சமுதாயத்திலேயே மிகச் சிறந்த அந்த மக்களுக்குப் பொறுப்பாளராக அல்லாஹ் ஆக்கமாட்டான்.

இவர்களில் சிறப்பில் குறைந்தவர் ஏதாவது ஒரு தனித்தன்மையைக் கொண்டு தன்னைவிட உயர்ந்தவரைப் பார்க்கிலும் மேன்மை பெற்று விளங்கலாம். ஆனால், ஒரு தன்மையை வைத்து

மற்றவரைவிட அவரே முற்றிலும் சிறந்தவர் என்று முடிவு செய்யக் கூடாது. ஏனெனில், மேன்மைக்குக் காரணமான பண்புகள் பல இருக்கின்றன.

**நபி ﷺ அவர்களின் "உம்மத் - சமுதாயம்" மனித சமுதாயங்களில் மிகவும் சிறந்தது; அல்லாஹ்விடம் அதிகம் கண்ணியத்திற் குரியது.**

"*(நம்பிக்கையாளர்களே!) நீங்கள்தான், மனிதர்களில் தோன்றிய வகுப்பார்களி லெல்லாம் மிக மேன்மையானவர்கள். (ஏனென்றால்,) நீங்கள் (மனிதர்களை) நன்மையான காரியங்களை(ச் செய்யும்படி) ஏவி, பாவமான காரியங்களிலிருந்து (அவர்களை) விலக்கி, உண்மையாகவே அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கின்றீர்கள்.*"

*(ஆலு இம்ரான் 3 : 110)*

**இந்த உம்மத்தில் மிகவும் சிறப்புக்குரியவர்கள் "ஸஹாபாக்கள்' நபித்தோழர்கள் ஆவர். அடுத்து "தாபியீன்கள்' - நபித்தோழர்களைப் பின்பற்றியவர்கள். அடுத்து அந்தத் தாபி யீன்களைப் பின்பற்றியவர்கள் ஆவர். இந்த உம்மத்தில் ஒரு கூட்டத்தினர் மறுமைநாள் வரும் வரை சத்தியத்திலேயே நிலைத்திருப் பார்கள். அவர்களை ஆதரிக்காதவர்களும், அல்லது அவர்களை எதிர்ப்பவர்களும் அவர்களுக்கு எவ்வித நஷ்டத்தையும் செய்து விடமுடியாது.**

கண்ணியமிகு ஸஹாபாக்களிடையே சில பிரச்சி னைகள் நிகழ்ந்தன. அதற்கு காரணம், அவர் களது மாறுபட்ட ஆய்வாகும். அந்த ஆய்வில் சரியான நிலைப்பாடு கொண்டிருந்தவர்களுக்கு இரண்டு நன்மைகள் உண்டு. ஆய்வில் தவறி ழைத்தவர்களுக்கு ஒரு நன்மை மட்டும் உண்டு. அத்துடன் அவர்களது தவறுகளும் மன்னிக்கப்பட்டவைதான்.

நபித்தோழர்களைப் பற்றி அவர்களுக்குத் தகுதி யான வகையில் உயர்வாகப் பேசவேண்டும். அவர்களது தவறுகளைப் பற்றி நாம் விமர்சனம் செய்வது கூடாது. அவர்களில் எவரைப் பற்றியும் தப்பான எண்ணம் கொள்வது; வஞ்சம் கொள்வது; குரோதத்தை வெளிப்படுத்துவது போன்ற தீய குணங்களிலிருந்து நாம் நமது உள்ளங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், அந்த ஸஹாபாக்கள் குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

*“உங்களில் எவர் (மக்காவை) வெற்றி கொள்வதற்கு முன்னர் தம் பொருளைச் செலவு செய்து போரும் புரிந்தாரோ, அவர் மகத்தான பதவி உடையவர். ஆகவே, அதற்குப் பின்னர் தன் பொருளைச் செலவு செய்து போர் புரிந்தவர் அவருக்குச் சமமாக மாட்டார். எனினும், இவ்விருவருக்கும் அல்லாஹ் நன்மையையே வாக்களித்திருக்*

*கின்றான். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்."*

*(அல்ஹதீத் 57 : 10)*

அந்த ஸஹாபாக்கள் விஷயத்தில் நாம் பேண வேண்டிய ஒழுக்கத்தைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான்:

*"எவர்கள் இவர்களுக்குப் பின் வந்தார்களோ அவர்கள் "எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னித்தருள்! எங்களுக்கு முன் நம்பிக்கை கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் மன்னித்தருள்! நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிகக் கிருபையுடையவனும் இரக்கமுடையவனுமாக இருக்கின்றாய்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர்." (அல்ஹஷ்ர் 59 : 10)*

---------

## மறுமை நாள் (அல்யவ்முல் ஆகிர்)

மறுமை நாளை நம்பிக்கை கொள்ள வேண்டும். மறுமை நிச்சயமாக நிகழும். அதுவே இறுதிநாள்; அந்த நாளைக்குப் பிறகு வேறொரு நாள் இல்லை. அந்த நாளில் மனிதர்கள் உயிருடன் எழுப்பப்படுவார்கள். பிறகு சொர்க்கத்தில் அல்லது நரகத்தில் என்றென்றும் நிரந்தரமாக தங்கிவிடுவார்கள்.

இஸ்ராஃபீல் (அலை) இரண்டாவது முறையாக "சூர்"ல் ஊதிய உடன் மரணித்தவர்களை அல்லாஹ் உயிர் கொடுத்து எழுப்புவான்.

"'*சூர்' (எக்காளம்) ஊதப்பட்டால் வானங்களில் இருப்பவர்களும் பூமியில் இருப்பவர்களும் மூர்ச்சித்து மதி இழந்து (விழுந்து அழிந்து) விடுவார்கள்; அல்லாஹ் நாடிய*

நம்பிக்கையின் அடிப்படைகள் | 100

*வர்களைத்தவிர! மறுமுறை சூர் ஊதப்பட்டால் உடனே அவர்கள் அனைவரும் (உயிர்பெற்று) எழுந்து நின்று (இறைவனை) எதிர்நோக்கி நிற்பார்கள்.*"

*(அஸ்ஸுமர் 39 : 68)*

அப்போது அனைத்து மனிதர்களும் “கப்ர்” புதைகுழிகளிலிருந்து எழுந்து அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வின் முன் நிற்பார்கள். அவர்கள் பாத அணியின்றியும் ஆடையின்றியும் கத்னா செய்யப்படாமலும் இருப்பார்கள்.

"*முதல் தடவை நாம் அவர்களைப் படைத்த பிரகாரமே (அந்நாளில்) நாம் (அவர்களுக்கு உயிர் கொடுத்து) அவர்களை மீள வைப்போம். இது நம்மீது கடமையான தொரு வாக்குறுதியாகும். நிச்சயமாக நாம் இதனைச் செய்தே தீருவோம்.*"

*(அல்அன்பியா 21 : 104)*

**மனிதர்களின் செயலேடுகள் வலது கரத்தில் அல்லது முதுகுக்குப் பின்னாலிருந்து இடது கரத்தில் கொடுக்கப்படும்.**

*"ஆகவே (அந்நாளில்) எவருடைய வலது கையில் அவருடைய செயலேடு கொடுக்கப் படுகின்றதோ, அவர் மிக்க இலகுவாக கேள்வி கணக்குக் கேட்கப்படுவார். அவர் சந்தோஷப்பட்டவராக (சுவனபதியிலுள்ள) தன்னுடைய குடும்பத்தாரிடம் திரும்புவார். எவருடைய செயலேடு அவருடைய முதுகுப்புறம் கொடுக்கப்பட்டதோ அவர் (தனக்குக்) கேடுதான் என்று சப்தமிட்டுக் கொண்டே நரகத்தில் நுழைவார்."*

*(அல்இன்ஷிகாக் 84 : 7-12)*

*"ஒவ்வொரு மனிதனின் செயலைப் பற்றிய (விரிவான தினசரிக் குறிப்பை) அவருடைய கழுத்தில் மாட்டியிருக்கிறோம். மறுமை நாளில் அதனை அவருக்கு ஒரு புத்தகமாக*

*வெளியே கொண்டு வருவோம். அவர் (தனக்கு முன்) அது விரித்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பார். (அச்சமயம் அவரை நோக்கி) "உன் (குறிப்புப்) புத்தகத்தை நீ படித்துப்பார், இன்றைய தினம் உன்னுடைய கணக்கைப் பார்க்க நீயே போதுமானவன்." (என்று கூறுவோம்.)*

*(பனீ இஸ்ராயீல் 17 : 13, 14)*

**மறுமைநாளில் மனிதர்களின் நன்மை தீமையை நிறுப்பதற்கு தராசுகள் வைக்கப் படும்; அதில் எந்தவொரு ஆத்மாவுக்கும் சிறிதும் அநீதியிழைக்கப்படாது.**

*"ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர், (அங்கு) அதனையும் கண்டு கொள்வார். (அவ்வாறே) எவர் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாரோ அதனையும் அவர் (அங்கு) கண்டு கொள்வார்." (அஸ்ஸில்ஸால் 99 : 7, 8)*

*“எவர்களுடைய (நன்மையின்) எடை குறைகிறதோ அத்தகையோர் தமக்குத் தாமே நஷ்டம் விளைவித்தவர்கள். அவர்கள் எந்நாளுமே நரகத்தில் தங்கிவிடுவார்கள். அவர்களுடைய முகங்களை (நரகத்தின்) நெருப்பு பொசுக்கிக் கொண்டிருக்கும். அவர்கள் (உதடுகளெல்லாம் வெந்து சுருண்டு முகம்) விகாரமானவர்களாக இருப்பார்கள்.”*

*(அல்முஃமினூன் 23 : 103, 104)*

*“எவரேனும் ஒரு நன்மையைச் செய்தால் அவருக்கு அதைப் போல் பத்து பங்கு (நன்மை) உண்டு. எவரேனும் ஒரு தீமை யைச் செய்தால் அதைப்போன்றதே தவிர (அதிகமாக) அவருக்குக் கூலி கொடுக்கப் பட மாட்டாது. மேலும் அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.”*

*(அல்அன்ஆம் 6 : 160)*

மகத்தான "ஷஃபாஅத்" சிபாரிசு செய்யும் தகுதி முஹம்மது நபி ﷺ அவர்களுக்கு மட்டும் வழங்கப்படும். மனிதர்கள் மறுமையில் அல்லாஹ்வின் முன்பாக தாங்க இயலாத துன்பத்திலும் சிரமத்திலும் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பார்கள். அதுசமயம் முதலில் ஆதம், பிறகு நூஹ், பிறகு இப்றாஹீம், பிறகு மூஸா, பிறகு ஈஸா (அலை) ஆகியோரிடம் சென்று சிபாரிசு செய்யக் கோருவார்கள். அவர்கள் மறுத்துவிடவே இறுதியாக நபி ﷺ அவர்களிடம் வருவார்கள். நபியவர்கள் அல்லாஹ்விடம் அனுமதி கோருவார்கள். அல்லாஹ் அனுமதி வழங்கியவுடன் மக்களின் விசாரணையை ஆரம்பிக்கக் கோரி அல்லாஹ்விடம் சிபாரிசு செய்வார்கள்.(ஸஹீஹுல் புகாரி - 4712)

**தங்கள் பாவத்தின் காரணமாக நரகில் நுழைந்துவிட்ட நம்பிக்கையாளர்கள், (முஃமின்கள்) அதிலிருந்து வெளியேற்றப்பட சிபாரிசு செய்யப்படும்.**

இந்த வகை “ஷஃபாஅத்” முஹம்மது ﷺ அவர்கள், மற்ற நபிமார்கள், முஃமின்கள், மலக்குகள் ஆகிய அனைவருக்கும் உரியதாகும். மேலும், அல்லாஹ் முஃமின்களில் பல கூட்டத் தினரை எவருடைய சிபாரிசுமின்றியே தனது கருணையாலும் கிருபையாலும் மட்டும் நரகிலிருந்து வெளியேற்றுவான்.

**நபி ﷺ அவர்களுக்கு “கவ்ஸர்” எனும் விசேஷமான நீர் தடாகத்தை மறுமை நாளில் அல்லாஹ் வழங்குவான்.**

“*(நபியே!) நிச்சயமாக நாம் உங்களுக்கு கவ்ஸரைக் கொடுத்திருக்கின்றோம்.*”

*(அல்கவ்ஸர் 108 : 1)*

அதன் நீர் பாலைவிட மிக வெண்மையானது; தேனைவிட மிக இனிப்பானது; கஸ்தூரியை விட மணமிக்கது. அந்தத் தடாகத்தின் நீளம் ஒரு மாத நடைதூரம் ஆகும். அவ்வாறே அதன்

அகலமும் ஒரு மாத நடைதூரம் ஆகும். அதன் கோப்பைகள் அழகாலும் எண்ணிக்கையாலும் வானில் மிளிரும் நட்சத்திரங்களுக்கு ஒப்பான தாகும். நபி ﷺ அவர்களின் சமுதாயத்தினரில் உள்ள முஃமின்கள் அந்த தடாகத்திலிருந்து நீர் அருந்துவார்கள். அந்த மதுரமான நீரை அருந்தியவருக்கு அதன்பிறகு எப்போதும் தாகம் ஏற்படாது. (ஸஹீஹுல் புகாரி 4964-66)

## பாலம் ஒன்று நரகின் மீது அமைக்கப் பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மனிதரும் அவர்களது செயல்களுக் கேற்ப அதனைக் கடப்பார்கள். முதலாவதாக மின்னலைப்போன்றும் அடுத்து காற்றைப் போன்றும் பின்னர் பறவையைப் போன்றும் மனிதர்களின் நடையைப் போன்றும் கடப்பார்கள். நபி ﷺ அவர்கள் அப்பாலத்தில் நின்றவர்களாக “இறைவனே! பாதுகாப்பாயாக, பாதுகாப்பாயாக!” என்று அல்லாஹ்விடம்

பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்.

(ஸஹீஹுல் புகாரி 7437)

சில அடியார்களின் நற்செயல்கள் குறைவாக, பலவீனமாக இருக்கும். அவர்கள் அப்பாலத்தில் ஊர்ந்து வருவார்கள். அப்பாலத்தின் இரு ஓரங்களிலும் இரும்புக் கொக்கிகள் தொங்க விடப்பட்டிருக்கும். குறிப்பிட்ட சிலரை அவை கவ்விப் பிடிக்கும். சிலர் காயங்களுடன் தப்பிப் பார்கள். சிலர் நரகில் வீழ்த்தப்படுவார்கள்.

**மறுமை நாளைப் பற்றியும் அதன் அமளி களைப் பற்றியும் குர்ஆனிலும் ஸஹீஹான ஹதீஸ்களிலும் வந்துள்ள அனைத்தும் உண்மையான செய்திகள்; நிச்சயம் அவை நிகழக்கூடியவையாகும்.**

சொர்க்கம், நரகம் உண்மையே. நபி ﷺ அவர் களின் சிபாரிசுக்குப் பிறகுதான் சுவனவாசிகள் அதில் நுழைவார்கள்; இந்தத் தகுதி நபி ﷺ அவர்களுக்கு மட்டும் உரித்தானது.

சொர்க்கம் என்பது அல்லாஹ், தன்னை அஞ்சி வாழ்ந்த நம்பிக்கையாளர்களுக்கென தயார் செய்து வைத்திருக்கும் இன்பமிக்க இல்லமாகும். அதன் அருட்கொடைகளை எந்தவொரு கண்ணும் கண்டிராது; எந்தச் செவியும் கேட்டிராது; அவை எந்தவொரு மனிதரின் கற்பனையிலும் உதித்திருக்காது.

*“அவர்கள் செய்த (நற்)காரியங்களுக்குக் கூலியாக நாம் அவர்களுக்காக (தயார் படுத்தி) மறைத்து வைத்திருக்கும் கண் குளிரக்கூடிய (சன்மானத்)தை எவராலும் அறிந்து கொள்ள முடியாது.”*

*(அஸ்ஸஜ்தா 32 : 17)*

நரகம் என்பது வேதனைகள் நிறைந்த இடமாகும். தன்னை நிராகரித்த அநியாயக்காரர் களுக்கென அல்லாஹ் அதனைத் தயார் செய்து வைத்துள்ளான். அதில் உள்ள வேதனை

களும் தண்டனைகளும் மனித கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும்.

*“அநியாயக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தைத்தான் தயார்படுத்தியுள்ளோம். அந்நரகத்தின் ஜுவாலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் (தண்ணீர் கேட்டு) அபயமிட்டால் காய்ந்து உருகிய செம்பைப் போலுள்ள நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும். (அவர் அதனைக் குடிப் பதற்கு முன்னதாகவே) அது அவர்களு டைய முகத்தைச் சுட்டுக் கருக்கிவிடும். மேலும், அது மிக்க (அருவருப்பான) கெட்ட பானமாகும். அவர்கள் இளைப் பாறும் இடம் மிகக் கெட்டது.”*

*(அல்கஃஹ்ஃப் 18 : 29)*

சொர்க்கமும் நரகமும் படைக்கப்பட்டு இருக்கின்றன. அவை என்றென்றும் அழியாது.

*“ஆகவே (உங்களில்) எவர் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கின்றாரோ அவரைச் சொர்க்கங்களில் புகச் செய்வான். அதில் சதா நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும். என்றென்றும் அவர் அதில் தங்கிவிடுவார். நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு (அங்கு) வாழ்க்கையை அழகு படுத்திவிடுவான்.” (அத்தலாக் 65 : 11)*

*“நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரைச் சபித்து, கொழுந்து விட்டெரியும் நெருப்பை அவர்களுக்குத் தயார்படுத்தி வைத்திருக்கிறான். அவர்கள் என்றென்றும் அதில் தங்கி விடுவார்கள். (அவர்களைக்) காப்பாற்றுவோரையும் (அவர்களுக்கு) உதவி செய்வோரையும் அங்கு அவர்கள் காணமாட்டார்கள். நரகத்தில் அவர்களுடைய முகங்களைப் புரட்டிப் பொசுக்கும் நாளில் “எங்களுடைய கேடே! நாங்கள்*

*அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமே?" என்று கதறு வார்கள்." (அல்அஹ்ஸாப் 33 : 64 - 66)*

குர்ஆனும் நபிமொழியும் குறிப்பிட்டு அல்லது தன்மைகளை வைத்து யாரையெல்லாம் சொர்க் கவாசிகள் எனச் சான்று பகர்கின்றனவோ அவர்கள் அனைவரும் சொர்க்கவாசிகள் ஆவர். அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோரைப் போன்று சொர்க்க வாசிகள் என நபி ﷺ அவர்கள் எந்தெந்தத் தோழர்களைப் பற்றிக் கூறினார்களோ அவர்கள் அனைவரும் குறிப்பிட்டு நற்செய்தி சொல்லப்பட்டவர்கள் ஆவர்.

அவ்வாறே ஒவ்வொரு நம்பிக்கையாளரும், இறையச்சமுடையவர்களும் அவர்களிடம் காணப்படும் நல்ல தன்மைகள், பண்புகளின் மூலம் சொர்க்கவாசிகள் என சான்றளிக்கப் பட்டவர்கள்.

குர்ஆனும் நபிமொழியும் குறிப்பிட்டு அல்லது தன்மைகளை வைத்து யாரையெல்லாம் நரகவாசிகள் என குறிப்பிடுகின்றதோ அவர்கள் அனைவரும் நரகவாசிகள்.

குறிப்பிட்டு கூறப்பட்டவர்கள் அபூலஹப், அம்ரு பின் லுஹய்யி மற்றும் இவர்களைப் போன்றவர்கள். நிராகரிப்பாளர்கள், இணை வைப்பவர்கள், மற்றும் நயவஞ்சகர்கள் போன்ற அனைவரும் அவர்களின் தன்மைகளை வைத்து நரகவாசிகள் என சான்றளிக்கப் பட்டவர்கள்.

**“கப்ர்” - மண்ணறையில் சோதனை உண்டு. அந்தச் சோதனையாவது, மரணித்தவரிடம் அவரது இறைவனைப் பற்றியும் மார்க்கத்தைப் பற்றியும் நபியைப் பற்றியும் விசாரணை செய்யப்படும்.**

“*நம்பிக்கை கொண்டவர்களை இவ்வுலக*

*வாழ்க்கையிலும் மறுமையிலும் (லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும்) உறுதியான வாக்கியத்தைக் கொண்டு அல்லாஹ் உறுதிப்படுத்துகிறான்."* *(இப்றாஹீம் 14 : 27)*

"எனது இறைவன் அல்லாஹ், எனது மார்க்கம் இஸ்லாம், எனது நபி முஹம்மது ﷺ" என நம்பிக்கையாளர் பதில் கூறுவார். நிராகரிப்பவர்களும் நயவஞ்சகர்களும் "எதைப் பற்றியும் எனக்குத் தெரியாது. மனிதர்கள் எதையோ கூறக்கேட்டேன். அதையே நானும் கூறிக்கொண்டிருந்தேன்" என்று பதிலளிப்பார்கள்.

## நம்பிக்கையாளர்களுக்கு கப்ரில் ஏராளமான அருட்கொடைகள் வழங்கப்படும்.

*"இத்தகையோரின் உயிரை மலக்குகள் அவர்கள் பரிசுத்தவான்களாக இருக்கும் நிலையில் கைப்பற்றுகின்றனர். (அப்பொழுது அவர்களை நோக்கி) "ஸலாமுன்*

*அலைக்கும்" (உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக!) நீங்கள் (நற்செயல்) செய்து கொண்டிருந்ததன் காரணமாக சொர்க்கத் திற்குள் நுழையுங்கள் என்று கூறுவார்கள்."*

*(அந்நஹ்ல் 16 : 32)*

தீய வழியில் சென்றவர்களுக்கும் பாவிகளுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் கப்ரில் வேதனை செய்யப்படும்.

*"இந்த அக்கிரமக்காரரர்கள் மரண வேதனை யிலிருக்கும் சமயத்தில் நீர் அவர்களைப் பார்ப்பீராயின் மலக்குகள் (வானவர்கள்) தங்கள் கைகளை நீட்டி (அவர்களை நோக்கி) "உங்களுடைய உயிர்களைக் கொடுங்கள். இன்றைய தினம் இழிவு தரும் வேதனையே உங்களுக்குக் கூலியாக கொடுக்கப்படும். நீங்கள் உண்மையல் லாததை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறிக் கொண்டிருந்ததும், அவனுடைய*

*வசனங்களை பெருமை கொண்டு புறக் கணித்து வந்ததுமே இதற்குக் காரணமாகும் என்று கூறுவதைக் காண்பீர்.”*

***(அல்அன்ஆம் 6 : 93)***

இது குறித்த நபிமொழிகள் ஏராளமாக காணப் படுகின்றன. இந்த மறைவான விஷயங்கள் பற்றி குர்ஆனிலும் நபிமொழியிலும் வந்துள்ள அனைத்தையும் நம்பிக்கை கொள்வது ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் கட்டாய மாகும். அதன் கருத்துகளில் எதையும் உலக நடைமுறையோடு ஒப்பிட்டுப் பார்த்து ஆட்சே பனை செய்யக் கூடாது. மறுமையின் எந்த நடைமுறையையும் உலகின் நடைமுறையைக் கொண்டு கணிக்க முடியாது. இரண்டுக்கும் இடையில் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன.

அல்லாஹ்வே உதவி செய்யப் போதுமானவன்.

-------

# விதி

அல்லாஹ் நிர்ணயித்த “கத்ர்” எனும் விதியை நம்பிக்கை கொள்ள வேண்டும். நன்மை தீமை அனைத்தும் அந்த விதியின்படியே நடக்கின்றன.

“கத்ர்” என்பது அல்லாஹ்வின் அறிவிற்கும் ஞானத்திற்கும் ஏற்ப படைப்பினங்கள் அனைத்தையும் பற்றிய அல்லாஹ்வின் தீர்மானமாகும்.

கத்ரில் நான்கு படித்தரங்கள் உள்ளன.

முதலாவது: **அறிந்திருத்தல்**

அதாவது, அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவன்; நடந்தது, நடக்கப்போவது, அது எப்படி நடக்கும் என்ற அனைத்தையும் அவனது முன்சென்ற நிலையான அறிவைக் கொண்டு அவன் அறிந்து வைத்துள்ளான். எனவே

அறியாமைக்குப் பின் அறிதல் (ஒன்றை அறியாமல் இருந்தான்; பின்பு அறிந்து கொண்டான்) என்பதும் அறிந்த பின் மறதி (ஒன்றை அறிந்து வைத்திருந்தான்; பின்பு மறந்து விட்டான்) என்பதும் அல்லாஹ்வுக்குக் கிடையாது.

இரண்டாவது: **எழுதப்பட்டிருத்தல்**

மறுமை நாள்வரை நிகழக்கூடிய அனைத்தையும் அல்லாஹ் "அல்லவ்ஹுல் மஹ்ஃபூள்" எனும் பதிவுப் புத்தகத்தில் எழுதியுள்ளான்.

"*(நபியே!) வானத்திலும் பூமியிலும் இருப்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான் என்பதை நீர் அறியவில்லையா? நிச்சயமாக இவை அனைத்தும் ஒரு புத்தகத்தில் இருக்கின்றன. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிகச் சுலபமானதே!*"

*(அல்ஹஜ் 22 : 70)*

*"அல்லவ்ஹுல் மஹ்ஃபூளில் பதிவு செய்யப் பட்டுள்ளது."* *(அல்புரூஜ் 85 : 22)*

மூன்றாவது: **நாடுதல்**

வானங்கள் பூமியில் உள்ள அனைத்தையும் அல்லாஹ் நாடியிருக்கின்றான். அவனது நாட்டமின்றி எதுவும் உண்டாகவில்லை; உண்டாகவும் முடியாது. அல்லாஹ் எதை நாடினானோ அதுவே நடந்தது; அவன் எதை நாடவில்லையோ அது நடக்கவில்லை; ஒருபோதும் நடக்கவே நடக்காது.

நான்காவது: **படைத்தல்**

*"அல்லாஹ்வே அனைத்து பொருட் களையும் படைப்பவன்; அவனே சகல பொருட்களின் பொறுப்பாளன். வானங்கள் பூமியிலுள்ளவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. (அஸ்ஸுமர் 39 : 62, 63)*

இந்த நான்கு விஷயங்கள் அல்லாஹ்வுக்கும்

அவனது அடியார்களுக்கும் இடையே உள்ள அனைத்தையும் எடுத்துக் கொள்ளும். அடியார்களின் சொல், செயல், அமைதி என அனைத்தையும் அல்லாஹ் அறிந்திருக்கிறான். அனைத்தும் அல்லாஹ்வின் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை அனைத்தும் அல்லாஹ் நாடியே நடக்கின்றன. அவனே அவற்றைப் படைக்கின்றான்.

"*ஆகவே, உங்களில் எவர் நேரான பாதையில் செல்ல விரும்புகிறாரோ அவருக்கு (இந்தக் குர்ஆன் ஓர் உபதேசமாகும்.) எனினும், அகிலகத்தாரின் இறைவனாகிய அல்லாஹ் நாடினால் தவிர நீங்கள் (நல்லுணர்ச்சி பெற) நாடமாட்டீர்கள்.*"

*(அத்தக்வீர் 81 : 28, 29)*

"*ஆகவே அல்லாஹ் நாடியிருந்தால் (இவ்வாறு) அவர்கள் சண்டை செய்திருக்க மாட்டார்கள். ஆனால் அல்லாஹ், தான்*

*நாடியவற்றையே செய்வான்."*

*(அல்பகரா 2 : 253)*

*"அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். ஆகவே (நபியே!) நீர் அவர்களையும் அவர்களுடைய பொய்க்கூற்றுகளையும் விட்டுவிடுவீராக!" (அல்அன்ஆம் 6 : 137)*

*"உங்களையும் நீங்கள் செய்பவற்றையும் அல்லாஹ்வே படைத்தான்."*

*(அஸ்ஸாஃப்ஃபாத் 37 : 96)*

அல்லாஹ்வின் நாட்டப்படியே அனைத்தும் நடைபெறுகிறது என்பதை நம்பிக்கை கொள்வதுடன் அல்லாஹ் அடியார்களுக்கு சுய விருப்பத்தையும் ஆற்றலையும் வழங்கியிருக்கிறான். அவர்கள் அவற்றைக் கொண்டே தங்கள் செயல்களைச் செய்கிறார்கள் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அடியான் செய்யும் செயல்களில் அவனது விருப்பமும் ஆற்றலும் உள்ளது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

**ஒன்று:** *“ஆகவே உங்கள் விளை நிலங்களுக்கு நீங்கள் நாடியவாறு வாருங்கள்.”*

*(அல்பகரா 2 : 223)*

*“அவர்கள் (உம்முடன் போருக்குப்) புறப்பட (உண்மையாகவே) நாடியிருந்தால் அதற்கு வேண்டிய தயாரிப்புகளை (முன்னதாகவே) செய்திருப்பார்கள்.”* *(அத்தவ்பா 9 : 46)*

“வருவது’ “தயார் செய்வது” குறித்த நாட்டம் அடியார்களுக்கு இருப்பதை மேற்கண்ட குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**இரண்டு:** ஏவல் விலக்கலை அடியார்களுக்கு அல்லாஹ் தந்திருக்கின்றான். அடியார்களுக்கென சுய விருப்பமும் வலிமையும் இல்லையென்றால் ஏவல் விலக்கலை அவர்களுக்குத்

தருவது சக்தியில்லாதவரிடம் ஒரு செயலைச் செய்யுமாறு நிர்ப்பந்திப்பதாகிவிடும். ஆனால், அல்லாஹ் ஞானமிக்கவன்; அளவற்ற அருளாளன். மேலும், அவன் இறக்கிய நூலும் இதை மறுத்துரைக்கிறது.

*“அல்லாஹ் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்குமேல் நிர்ப்பந்திப்பதில்லை.”*

*(அல்பகரா 2 : 286)*

**மூன்று:** நன்மை செய்பவர்களை அல்லாஹ் புகழ்கிறான். அதற்காக அவர்களுக்கு நற்கூலி வழங்குகின்றான். தீமை செய்பவர்களை இகழ்கிறான். அவர்களுக்குத் தண்டனை கொடுக்கின்றான். இப்படி இரு விதமான செயலுக்கும் ஏற்ப அல்லாஹ் கூலி கொடுக்கிறான். செயல்கள் அடியார்களின் விருப்பம் மற்றும் நாட்டத்தின்படி நடைபெறவில்லையெனில் நன்மை செய்பவர்களைப் புகழ்வது வீணானதாகவும் தீமை செய்பவர்களைத் தண்டிப்பது அநீதமாகவும்

ஆகிவிடும். அல்லாஹ் வீணானவற்றை விட்டும் அநீதியிழைப்பதை விட்டும் பரிசுத்தமானவன்.

**நான்கு:** அல்லாஹ் தூதர்களை அனுப்பி வைத்தான்.

*"பல தூதர்களை நற்செய்தி கூறுகின்றவர்களாகவும் அச்சமூட்டி எச்சரிக்கின்றவர்களாகவும் (நாம் அனுப்பி வைத்தோம்). இதற்குக் காரணம் தூதர்களை அனுப்பிய பிறகு அல்லாஹ்விற்கு எதிராக மக்களுக்கு எவ்வித ஆதாரமும் இருக்கக்கூடாது என்பதே." (அன்னிஸா 4 : 165)*

அடியார்களின் செயல்கள் அவர்களது நாட்டப்படியும் விருப்பப்படியும் நடைபெறவில்லையெனில் தூதர்களை அனுப்பி அல்லாஹ் நிலை நாட்டிய ஆதாரம் வீணாகிவிடும்.

**ஐந்து:** செயல் புரியும் ஒவ்வொருவனும் எந்தவொரு நிர்ப்பந்தமோ தூண்டுதலோ இன்றி

தான் செயல்படுவதாக உணர்கிறான். அவன் நாடினால் நிற்கிறான்; அமர்கிறான்; நுழைகிறான்; வெளியேறுகிறான். பயணிக்கிறான்; தங்கி விடுகிறான். இவ்வாறான தனது செயல்களில் தன்னை எவரும் நிர்ப்பந்திப்பதாக அவன் உணர்வதில்லை. மாறாக தனது நாட்டப்படி செயல்படுவதற்கும் பிறரின் நிர்ப்பந்தத்தால் செயல்படுவதற்குமிடையே தெளிவான வேறு பாட்டை உணர்கிறான்.

அவ்வாறே பிறரால் நிர்ப்பந்திக்கப்பட்டு ஒரு செயலைச் செய்வதற்கும் தானே விரும்பிச் செய்வதற்குமிடையேயான வேறுபாட்டை மார்க்கம் சட்டரீதியாகவும் தெளிவுபடுத்தி யுள்ளது. அல்லாஹ்வுக்குரியதில் தனது மனம் விரும்பாமல் நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் ஒரு செயலைச் செய்பவன் தண்டிக்கப்படமாட்டான்.

விதியைக் காரணம் காட்டி ஒரு பாவி தனது பாவச் செயல்களை நியாயப்படுத்த முடியாது.

ஏனெனில், தன் விஷயத்தில் அந்தப் பாவம் தீர்மானிக்கப்பட்டுள்ளதை அறியாமல் தனது சுயவிருப்பப்படியே அந்தப் பாவச் செயலை அவன் செய்கிறான். அல்லாஹ் எதைத் தீர்மானித்திருக்கிறான் என்பது அந்தச் செயல் நடைபெற்ற பிறகுதான் எவரும் அறிந்து கொள்ள முடியும்.

*"எந்த ஆத்மாவும் நாளைக்கு அது என்ன செய்யும் என்பதை அறியாது."*

*(லுக்மான் 31 : 34)*

இந்த நிலையில் "அல்லாஹ் எனக்கு விதித்திருந் ததைத்தானே நான் செய்கிறேன்; அதற்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும்?" என்று எவரும் கூறமுடியாது. காரணம், அவன் அந்த செயலில் ஈடுபடுவதற்கு முன் விதியில் தனக்கு என்ன விதிக்கப்பட்டுள்ளது என்பது அவனுக் குத் தெரியாது. இவ்வாறு வாதிடுவது தவறு என அல்லாஹ் குர்ஆனில் தெளிவுபடுத்துகிறான்.

*“அல்லாஹ் நாடியிருந்தால் நாங்களும் எங்களுடைய மூதாதைகளும் (அல்லாஹ்வுக்கு எதையும்) இணைவைத்திருக்க மாட்டோம்; (புசிக்கக்கூடிய) எதையும் (ஆகாதென) நாங்கள் தடுத்திருக்க மாட்டோம்” என்று இணைவைத்து வணங்கும் இவர்கள் கூறுகின்றனர். இவ்வாறுதான் இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் நம்முடைய வேதனையைச் சுகிக்கும் வரையில் (இறைத் தூதர்களைப்) பொய்யாக்கியே வந்தனர். ஆகவே (நபியே! அவர்களை நோக்கி இதற்கு) உங்களிடம் ஏதும் ஆதாரமுண்டா? (இருந்தால்) அதனை நம்மிடம் கொண்டு வாருங்கள். நீங்கள் வீணான சந்தேகத்தைத் தான் பின்பற்றுகிறீர்கள். மேலும், நீங்கள் சுயமாகவே கற்பனைதான் செய்து கொள்கிறீர்கள்” என்று கூறுவீராக!*

*(அல்அன்ஆம் 6 : 148)*

அல்லாஹ்வின் “கத்ரை” தனது செயல்களுக்குக் காரணம் காட்டும் பாவிகளுக்கு நாம் கூறுவதெல்லாம், “நன்மையாயினும் தீமையாயினும் அதை நீ செய்வதற்கு முன்னால் அல்லாஹ் எதைத் தீர்மானித்திருக்கிறான் என்பது உனக்குத் தெரியாது. இந்நிலையில் நான் நன்மை செய்வதைத்தான் அல்லாஹ் எனக்கு நாடி இருக்கிறான் என்று நினைத்து நீ ஏன் நன்மை செய்திருக்கக் கூடாது?'

இதனால்தான் நபி ﷺ அவர்கள் தங்களது தோழர்களிடம் “ஒவ்வொரு மனிதருக்கும் சுவனத்தில் அல்லது நரகத்தில் அவரது வசிப்பிடம் எழுதப்பட்டு விட்டது” என்று கூறினார்கள். அப்போது தோழர்கள் “நாங்கள் ஆதரவு வைத்து எங்களுடைய அமல்களை விட்டு விடலாமா?” என்று வினவினார்கள். நபி ﷺ அவர்கள் “இல்லை; அமல் செய்யுங்கள்!” நிச்சயமாக ஒவ்வொருவரும் (சொர்க்கம்

அல்லது நரகம் இரண்டில்) எதற்காக படைக் கப்பட்டாரோ அது (-நன்மை அல்லது தீமை செய்வது) அவருக்கு எளிதாக்கப்படும்" என்று கூறினார்கள்.

விதியைக் காரணம் காட்டும் பாவிக்கு நாம் சொல்வோம்:

1) நீ மக்காவுக்கு பிரயாணம் செய்ய விரும்பு கிறாய்; அதற்கு இரு வழிகள் உள்ளன. அதில் ஒன்று பாதுகாப்பற்ற, சிரமங்கள் நிறைந்த பாதை; மற்றொன்று பாதுகாப்பான, எளிதான பாதை என உன் நம்பிக்கைக்குரிய நண்பர் கூறுகிறார். அப்போது முதல் பாதையில் செல்ல உனக்குத் துணிவு பிறக்காது. இரண்டாவது பாதையிலேயே செல்வாய். அவ்வாறில்லாமல் "முதல் பாதையில் செல்வதுதான் எனது விதியில் உள்ளது" என்று கூறி அதில் நீ சென்றால் மக்கள் உன்னை "பைத்தியக்காரன்' என்றுதான் தீர்மானிப்பார்கள்.

2) உனக்கு இரண்டு வேலைகள் வருகின்றன. ஒன்று அதிக வருவாய் தரக்கூடியது. மற்றொன்று குறைந்த வருவாய் தரக்கூடியது. இப்போது சிறந்ததைப் பெறத்தானே நீ முயற்சி செய்வாய்? அவ்வாறிருக்க மறுமை விஷயத்தில் சிறந்ததைப் புறக்கணித்துவிட்டு, தாழ்ந்ததைச் செய்து விதியின் மீது நீ எப்படிப் பழி போடுவாய்!

3) உனக்கு ஏதேனும் உடல் ரீதியான நோய் ஏற்பட்டால் பல மருத்துவர்களின் கதவைத் தட்டுகிறாய்; சிகிச்சையின் போது ஏற்படும் வலியையையும் சகித்துக் கொள்கிறாய். இதற்காக மருத்துவரிடம் பல முறை செல்கிறாய். இவை உனக்கு சிரமமாகத் தோன்றுவதில்லை. அப்படி இருக்க பாவ நோயால் பீடிக்கப்பட்ட உனது இதயத்துக்குச் சிகிச்சை பெற இதே முயற்சியை நீ ஏன் மேற்கொள்ளக்கூடாது?

அல்லாஹ்வின் ஞானத்தையும், கருணையையும்

கவனித்து “ஷர்ரு”-தீமை அல்லாஹ்வின் பால் இணைக்கப்படுவதில்லை.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: “(இறைவனே!) தீமைகள் உன் பக்கம் இணைக்கப்படாது.”
(நூல்: ஸஹீஹ் முஸ்லிம்)

அல்லாஹ்வின் விதிகளில் எந்த நிலையிலும் தீமை இருக்காது. ஏனெனில், அல்லாஹ்வின் விதிகள் அவனது ஞானம் மற்றும் அருளின் வெளிப்பாடாகும். தீமைகள் உண்டாவதெல்லாம் அந்த விதியால் நடப்பவற்றில்தான்.

நபி ﷺ அவர்கள், ஹஸன் d அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த “குனூத்” பிரார்த்தனையில் “(அல்லாஹ்வே!) நீ எதைத் தீர்மானித்தாயோ அதன் தீமையிலிருந்து என்னைக் காப்பாயாக!” என்று கூறினார்கள்.

அல்லாஹ் எதைத் தீர்மானித்தானோ அத்துடன் தீமையை இணைத்துக் கூறியுள்ளார்கள்.

அத்துடன், தீர்மானிக்கப்பட்டவற்றில் ஏற்படும் தீமை முற்றிலும் தீமையாக இருப்பதல்ல. மாறாக ஒரு வகையில் பார்த்தால் தீமையாகத் தென்படும் அதே நேரத்தில் மற்றொரு கோணத்தில் அது நன்மையாக இருக்கும். அவ்வாறே ஓர் இடத்தில் தீமையாக இருப்பது மற்றோர் இடத்தில் நன்மை யாக இருக்கும்.

வறட்சி, வறுமை, நோய், அச்சம் போன்றவை தீமையே. இருப்பினும் மற்றொரு கோணத்தில் அவை நன்மையாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

*மனிதர்களின் கைகள் தேடிக் கொண்டதன் காரணமாக கடலிலும் தரையிலும் அழிவு வேலைகள் (அதிகமாகப்) பரவிவிட்டன. அதிலிருந்து அவர்கள் விலகிக்கொள்ளும் பொருட்டு அவர்களின் தீய செயல்களில் சிலவற்றின் தண்டனையை அவர்கள் (இம்மையிலும்) சுகிக்கும்படி அவன்*

*செய்ய வேண்டியதாகிறது.*

*(அர்ரூம் 30 : 41)*

திருடனின் கரத்தைத் துண்டிப்பது, விபசாரம் செய்தவனைக் கல்லால் எறிந்து கொலை செய்வது என்ற தண்டனைகளில் கரம் துண்டிக்கப்படுவதும் உயிர் பறிக்கப்படுவதும் திருடன் மற்றும் விபசாரியைக் கவனித்துத் தீமைதான். இது மற்றொரு கோணத்தில் நன்மை யாகும். அதாவது, அவர்களது குற்றத்துக்கான தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டால் அது அந்தக் குற்றங்களுக்குப் பரிகாரமாகி விடுகிறது. ஏனெனில், ஒரு குற்றத்துக்காக உலகிலும் மறுமையிலும் என இருமுறை தண்டனை நிறை வேற்றப்படாது. அது மட்டுமின்றி மற்றொரு கோணத்திலும் நன்மையாகும். தண்டனை நிறை வேற்றப்படுவதன் மூலம் சமூகத்தின் பொருள், கண்ணியம் மற்றும் உயிர்கள் பாதுகாக்கப் படுகின்றன.

இந்த மகத்தான அடிப்படைகளுடன்கூடிய மேன்மைக்குரிய இக்கொள்கை, இதை ஏற்பவருக்கு எண்ணிலடங்கா சிறப்புகளை அளிக்கின்றது.

## அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதின் பலன்கள்

அல்லாஹ்வையும் அவனது அழகிய பெயர்களையும், பரிசுத்தத்தன்மையையும் நம்பிக்கை கொள்ளும் அடியானுக்கு அல்லாஹ்வின் மீது அன்பும் நேசமும் அவனது மகத்துவமும் உள்ளத்தில் ஏற்படுகிறது. இதன் காரணமாக அல்லாஹ்வின் ஏவலை ஏற்று விலக்கலைத் தவிர்த்து வாழும் தன்மை உருவாகிறது. இந்த இரண்டின் மூலம்தான் இம்மையிலும் மறுமையிலும் தனி மனிதருக்கும் சமூகத்திற்கும் முழுமையான வெற்றியும் இறை அருளும் கிடைக்கின்றன.

*“ஆண் அல்லது பெண்களில் யார் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்வாரோ அவரை நிச்சயமாக நாம் (இம்மையில்) நல்வாழ்க்கை வாழச்செய்வோம். மேலும் (மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததைவிட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்.” (அன்னஹ்ல் 16 : 97)*

## மலக்குகளை நம்பிக்கை கொள்வதின் பலன்கள்

1. மலக்குகள் எவ்வளவு பிரமாண்டமான படைப்பு என்பது நாம் அறிந்ததே. அதிலிருந்து அவர்களைப் படைத்த அல்லாஹ் எத்தகைய மகத்துவமிக்கவன்; ஆற்றலுள்ளவன்; அதிகார மிக்கவன் என்பதை அறிந்து கொள்கிறோம்.

2. அடியார்களின் உதவிக்காக அல்லாஹ் மலக்குகளைப் படைத்திருக்கின்றான். அதற்காக

அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றோம். மனிதர்களைப் பாதுகாப்பது, அவர்களது செயல்களைப் பதிவுசெய்வது போன்ற பல்வேறு வேலைகளை மலக்குகளிடம் அல்லாஹ் ஒப்படைத்துள்ளான்.

3. அவர்கள் அல்லாஹ்வை முழுமையாக வணங்கி வருகிறார்கள். நம்பிக்கை கொண்டவர் களுக்காக அவர்கள் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கேட்கிறார்கள். எனவே, அவர்களை நாம் நேசிக்கிறோம்.

## வேதங்களை நம்பிக்கை கொள்வதின் பலன்கள்

1. ஒவ்வொரு சமுதாயத்தையும் நேர்வழிப்படுத்து வதற்காக அல்லாஹ் நூல்களை அருளினான். இதிலிருந்து மனிதர்களுக்கு அல்லாஹ் செய்த அருளையும் பேருதவிகளையும் அறிந்து கொள்கிறோம்.

2. முற்காலத்தில் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அவர்களது சூழ்நிலைக்கேற்ற சட்டங்களை உடைய நூல்களை அல்லாஹ் இறக்கி அருள் புரிந்தான். பிறகு எல்லாக் காலத்துக்கும் பொருந் தும் வகையில் இறுதி நூலான குர்ஆனை இறக்கி அருள் புரிந்தான். இதிலிருந்து அல்லாஹ் வின் ஞானத்தையும் அறிவையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

3. இதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகிறோம்.

## தூதர்களை நம்பிக்கை கொள்வதின் பலன்கள்

1. மனிதர்களை நேர்வழியின் பக்கம் அழைப்ப தற்காக சங்கைமிக்க தூதர்களை அல்லாஹ் அனுப்பினான். இதன் மூலம் மனிதர்களுக்கு அல்லாஹ் செய்த அருளையும் உதவியையும் அறிந்து கொள்கிறோம்.

2. இதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறோம்.

3. இறைத்தூதர்களை நேசிக்கிறோம். அவர்களைக் கண்ணியப்படுத்துகிறோம். அவர்களது தகுதிக்கேற்ப அவர்களைப் புகழ்கிறோம். ஏனெனில், இறைத்தூதர்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; அவனது அடியார்களில் மிகச் சிறந்தவர்கள்; அவனையே வணங்கி வந்தவர்கள்; அவனது தூதுத்துவத்தை எடுத்துரைத்தவர்கள்; மக்களுக்கு நன்மையை நாடியவர்கள்; இழைக்கப்பட்ட துன்பங்களைச் சகித்துக் கொண்டவர்கள்.

## மறுமை நாளை நம்பிக்கை கொள்வதின் பலன்கள்

1. அந்த மறுமை நாளில் அதிகமதிகம் நன்மைகளை அடைந்து கொள்ளும் ஆர்வத்தில் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் ஆர்வம்

கொள்கிறோம். அந்நாளின் தண்டனையைப் பயந்து பாவங்களிலிருந்து விலகிக் கொள்கிறோம்.

2. ஒரு நம்பிக்கையாளர் தனக்கு இவ்வுலகில் ஏற்படும் இழப்புகள் குறித்து கவலைப்படாமல் மறுமையில் அடையப் போகும் அல்லாஹ்வின் அருட்கொடைகளையும் நற்கூலியையும் எண்ணி ஆறுதல் அடைகிறார்.

## விதியை நம்பிக்கை கொள்வதின் பலன்கள்

1. காரணங்களைக் கையாண்டாலும் அல்லாஹ் வின் மீதே நம்பிக்கை வைக்கிறோம். ஏனெனில், காரணமும் அதன் பலனும் அல்லாஹ்வின் விதி மற்றும் ஏற்பாட்டைக் கொண்டே நடக்கிறது.

2. ஆன்மா நிம்மதி பெறுகிறது. இதயம் அமைதி யடைகிறது. தனக்கு ஏற்படும் ஒவ்வொரு துன்பமும் அல்லாஹ்வின் விதியைக் கொண்டு

தான் நடைபெறுகிறது என அறியும்போது அல்லாஹ்வின் விதியை திருப்தியுடன் ஏற்று மனம் நிம்மதியடைகிறது. விதியை உறுதியாக நம்பிக்கை கொள்பவரைவிட நிம்மதியான வாழ்வும், மன அமைதியும் மகிழ்ச்சியும் உடையவர் வேறு எவரும் இருக்க முடியாது.

3. தான் நினைத்த காரியம் நடந்து விட்டால் தான் விரும்பியதைச் சாதித்து விட்டோம் என எண்ணி தன்னைத்தானே பாராட்டிக் கொள்வதிலிருந்து தவிர்ந்துகொள்ள முடிகிறது. ஏனெனில், அல்லாஹ் விதித்திருந்ததன் காரணமாகவே அந்த நன்மைகள் தனக்குக் கிடைத்தன என்பதை உறுதிகொண்டு, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவோம். தற்பெருமை கொள்வதைத் தவிர்த்துக் கொள்வோம்.

4. எதிர்பாராத கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்படும் போது நாம் திடுக்கிடத் தேவையில்லை; பயப் படத் தேவையில்லை. ஏனெனில், அவை

அனைத்தும் வானம், பூமியின் ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் விதிப்படியே நடக்கின்றன. எது நடக்க வேண்டுமோ அது நிச்சயமாக நடந்தே தீரும் என்ற உறுதியுடன் பொறுமையை மேற்கொண்டு அல்லாஹ்விடம் நற்கூலியை எதிர்பார்ப்போம்.

இதையே அல்லாஹ் கூறுகிறான்:

“*(பொதுவாக) பூமியிலோ அல்லது (சொந்தமாக) உங்களுக்கோ ஏற்படக்கூடிய எந்தக் கஷ்டமும் (நஷ்டமும்) அது ஏற்படுவதற்கு முன்னதாகவே (அல்லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) புத்தகத்தில் பதிவு செய்யப் படாமல் இல்லை. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதே! உங்களை விட்டும் தவறிப் போனதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ளாதிருக்கவும், (அல்லாஹ்) உங்களுக்குக் கொடுத்ததைப் பற்றி நீங்கள் கர்வம் கொள்ளாதிருக்கவும், (இதனை*

*உங்களுக்கு அறிவிக்கின்றான்) அல்லாஹ் கர்வம் கொள்வோரையும் பெருமை யடிப்போரையும் நேசிப்பதில்லை.”*

***(அல்ஹதீது 57 : 22, 23)***

அல்லாஹ்வே! இக்கொள்கைகளின் மீது எங்களை நிலைப்படுத்துவாயாக! அதன் நற் பலன்களை எங்களுக்கு பரிபூரணமாக வழங்கு வாயாக! உன் அருளை எங்களுக்குப் பொழி வாயாக!

அல்லாஹ்வே! நீ எங்களுக்கு நேர்வழி காட்டிய பின்னர் எங்களது இதயங்கள் தடுமாறுவதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம். எல்லையற்ற உனது கருணையை எங்கள் மீது பொழிந்தருள்வாயாக! நீயே அருள்புரிபவர்களில் மிக்க மேலானவன்.

அனைத்துப் புகழும் ஏக இறைவனாகிய அல்லாஹ்வுக்கே! நபி ﷺ அவர்கள் மீதும்

அவர்களது குடும்பத்தார், தோழர்கள், மனத் தூய்மையுடன் அவர்களைப் பின்தொடர்ந்த வர்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருளும் அன்பும் என்றென்றும் நிலவட்டும்!

## நம்பிக்கையாளர்களிடம் இருக்கக்கூடாதவை

நம்பிக்கையாளர் தனது நம்பிக்கையை குஃப்ர் (நிராகரிப்பு), ஷிர்க் (இணைவைத்தல்), நிஃபாக் (நயவஞ்சகம்) ஆகியவற்றை விட்டும் பாதுகாத் தாக வேண்டும். ஆகவே, இம்மூன்றுக்கும் வழிவகுக்கும் அனைத்து தன்மைகளையும், சொல்களையும், செயல்களையும் மார்க்கம் முற்றிலும் தடை செய்துள்ளது. அவ்வாறு தடை செய்யப்பட்டவற்றின் விவரங்கள் கீழே கொடுக் கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் அல்குர்ஆன் மற்றும் ஆதாரமிக்க நபி மொழி களின் அடிப்படையில் தடை செய்யப்பட்டவை யாகும். ஆகவே, ஒவ்வொரு நம்பிக்கையாளரும்

தனது நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காக நிச்சயமாக இவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும்.

- அல்லாஹ்விற்கு இணைவைப்பதின் அனைத்து வகைகளும்.
- குறி பார்ப்பவன், ஜோஸியம் பார்ப்பவன் காணாமல் போனதைக் கண்டுபிடிப்பேன் என்று சொல்பவன் ஆகியோரிடம் செல்வது அல்லது அவர்கள் சொல்வதை உண்மையென்று நம்புவது.
- அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களுக்காக அறுப்பது. (அறுக்கும்போது அல்லாஹ்வின் பெயர் சொல்லி அறுத்தாலும் சரியே!)
- அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் ஆதாரமின்றிப் பேசுவது.
- அல்லாஹ்வுடைய மார்க்கத்தைத் தவிர மற்ற வழிமுறைகளைச் சட்டமாக எடுத்துக் கொள்வது.

- அல்லாஹ்வுடைய மார்க்கத்தைத் தவிர மற்ற வழிமுறைகளைக் கொண்டு பிரச்சி னைகளுக்குத் தீர்வு காண அழைப்பது.

- கண் திருஷ்டிகள் மற்றும் ஆபத்துகளைத் தவிர்ப்பதற்காகத் தாயத்துகள், கயிறுகள் அணிவது.

- சூனியத்தின் அனைத்து வகைகளும்.

- நட்சத்திரங்களையோ அல்லது மற்ற கோள் களையோ கொண்டு நன்மை அல்லது தீமை நடக்கும் என்று கூறுவது மற்றும் நம்புவது.

- அல்லாஹ்வுடைய (தாத்) உள்ளமையைப் பற்றி சிந்திப்பது. (அவனுடைய படைப்பு களைப் பற்றிதான் சிந்திக்க வேண்டும்.)

- அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் கொள்ளாமல் மரணிப்பது.

- இஸ்லாமிய மார்க்கத்தைப் பின் பற்றுபவரை நரகவாசி என்று கூறுவது.
- மார்க்க ஆதாரமில்லாமல் ஒருவரைக் காஃபிரென்று கூறுவது.
- உலகக் காரியங்களில் ஒன்றைப் பிறரிடத்தில் கேட்கும் போது அல்லாஹ்வின் முகத்திற் காக கொடுங்கள் என்று கேட்பது.
- அல்லாஹ்வுக்காக கொடுங்கள் என்று கேட்பவருக்குக் கொடுக்காமலிருப்பது. (ஆனால் அவர் கேட்கும் விஷயம் பாவமான காரியமாக இருக்கக் கூடாது.)
- காலத்தை ஏசுவது.
- சகுனம் பார்ப்பது.
- இணை வைப்பவர்கள், காஃபிர்களுடன் சேர்ந்து தங்குவது.
- அல்லாஹ்வுடைய எதிரிகளாகிய யூதர்கள்,

கிறிஸ்தவர்கள், இணைவைப்பவர்கள், காஃபிர்கள் (நிராகரிப்பாளர்கள்) ஆகியவர் களுடன் உளப்பூர்வமான நட்பு கொள்வது.

- அமல்களை வீணாக்குவது. உதாரணமாக: பிறர் பார்க்க வேண்டுமென்பதற்காகவோ, பிறர் புகழ வேண்டுமென்பதற்காகவோ ஓர் அமலைச் செய்வது அல்லது தனது அமல் களைச் சொல்லிக் காட்டுவது.

- கஅபதுல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜித் அக்ஸா ஆகிய மூன்று இடங்களைத் தவிர மற்ற இடங்களை புனிதமாகக் கருதி அவற்றைத் தரிசிக்கச் செல்வது.

- அடக்கஸ்தலங்களிலோ அல்லது அவற்றைச் சுற்றியோ கட்டடம் அமைப்பது.

- அடக்கஸ்தலங்கள் இருக்குமிடத்தில் விளக்கெரிப்பது.

- நபித்தோழர்களை ஏசுவது, அவர்களுக்கு

மத்தியில் நடந்த பிரச்சினைகளைப் பற்றி தவறான கண்ணோட்டத்தில் ஆராய்வது.

- தக்தீர் எனும் விதியைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது.
- மார்க்கக் கல்வி ஞானமின்றி அல்குர்ஆன் கருத்துகளில் தர்க்கம், விவாதம் செய்வது.
- அல்குர்ஆன் விஷயத்தில் சர்ச்சை செய்பவர்களுடனோ அல்லது அதைப் பரிகாசம் செய்பவர்களுடனோ அமர்வது.
- தக்தீர் எனும் விதியை மறுப்பவர்கள், இன்னும் இதுபோன்று கொள்கை ரீதியான பித்அத்கள் (அனாசாரங்கள்) செய்பவர்களை நோய் விசாரிக்கச் செல்வது அல்லது அவர்களது ஜனாஸாவில் கலந்து கொள்வது அல்லது அவர்களுக்காகக் கவலைப்படுவது.
- காஃபிர்களோ அல்லது பித்அத்தை

சார்ந்தவர்களோ எழுதிய மத ரீதியான புத்தகங்களைப் படிப்பது.

- காஃபிர்கள் எதிர்த்து அல்லாஹ்வை திட்டு வார்கள் என்று இருந்தால், அவர்களது பொய்யான கடவுள்களைத் திட்டுவது.
- அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளை, வசனங்களைப் பரிகாசம் செய்வது.
- அல்லாஹ் தடுத்தவற்றை ஆகுமாக்கிக் கொள்வது அல்லது அனுமதித்தவற்றைத் தடை செய்து கொள்வது.
- அல்லாஹ்வைத் தவிர பிறருக்கு (சிரம் பணிவது) சுஜூது செய்வது அல்லது குனிவது.
- நிஃபாக் எனும் நயவஞ்சகத் தன்மை உள்ளவர்களுடனும், பெரும் பாவங்களை வெளிப்படையாக செய்பவர்களுடன் கூடி உட்கார்ந்து பேசிமகிழ்வது.

- மார்க்கத்தில் பிரிவினை உண்டு பண்ணுவது. சத்தியத்தில் உள்ள ஜமாஅத்தை விட்டுப் பிரிவது.
- யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஷ்ரிக்குகள் (இணைவைப்பவர்கள்), மஜூஸிகள் (நெருப்பை வணங்குபவர்கள்) காஃபிர்கள் ஆகியோரின் மதச் சடங்குகள் மற்றும் அவர்களின் கலாசாரத்தைப் பின்பற்றுவது.
- யூதர்கள், கிறிஸ்தவர்கள் தங்களின் நூல்களிலிருந்து சொல்லும் விஷயங்களை உண்மை அல்லது பொய் என்று சொல்வது. (அதற்கு உண்மை அல்லது பொய் என்பதற்கு நமது மார்க்கத்தில் ஆதாரம் இருந்தாலே தவிர.)
- பிள்ளைகள், சிலைகள், பெற்றோர்கள் மீது சத்தியம் செய்வது.
- அல்லாஹ்வும் நீங்களும் நாடினால் என்று சொல்வது.

- அல்லாஹ்வைத் தவிர மற்றவரை இறைவன், கடவுள், ஆண்டவர் என்று சொல்வது.
- நேரம் சரியில்லை என்று சொல்வது.
- உன் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்! அல்லாஹ்வின் கோபம் உண்டாகட்டும்! நீ நரகவாதி! என ஒருவருக் கொருவர் சபித்துக் கொள்வது.

------

# DARUL HUDA

## PUBLICATION'S BOOK LIST

### தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை
2. நோன்பு
3. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை
4. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள்
5. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள்
6. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு)
7. அழைப்புப்பணி - அழைப்பாளர்
8. இஸ்லாமியக் கொள்கை - வினா விடைகள்
9. தடுக்கப்பட்டவை
10. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள்
11. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை
12. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள்

நம்பிக்கையின் அடிப்படைகள் |152

13. நம்பிக்கையின் அடிப்படைகள்
14. அல்குர்ஆன் துஆக்கள்
15. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு
16. மூன்று அடிப்படைகள்
17. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள்
18. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி)
19. அத்தவ்ஹீத்
20. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல்தமிழாக்கம் (Part-2) ஆலு இம்ரான்
21. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள்
22. வெற்றிக்கு வழி
23. அழைப்புப் பணி கேள்வி-பதில்
24. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம்
25. இயற்கை மதம்
26. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்)
27. இஸ்லாமின் இறைக்கோட்பாடு
28. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்)
29. முன்மாதிரி முஸ்லிம்

30. ஹஜ் உம்ரா வழிகாட்டி
31. தப்சீர் முதல் ஜுஸ்வு
33. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி
34. அர்ரஹீக் அல்மக்தூம்
35. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm)
36. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (10.5x14 cm)
37. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ
38. ஹிஸ்னுல் முஸ்லிம் (ஆர்ட்பேப்பர் 21x14 cm)
39. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம்
40. உம்ரா வழிகாட்டி

## அல்குர்ஆன் தமிழாக்கங்கள்

41. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (அல் பாதிஹா முதல் அத் தவ்பா வரை)
42. கண்ணியமிகு குர்ஆன் இனிமைமிகு தமிழாக்கம் (Soft Bound)

43. சங்கைமிகு குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம் (Hard bound)
44. கண்ணியமிகு குர்ஆன் இனிமைமிகு தமிழாக்கம் (Hard Bound)
45. உயர்வுமிகு குர்ஆன் உன்னத தமிழாக்கம் (Hard Bound 28 gsm)
46. சங்கைமிகு குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம் (Zip cover)
47. மேன்மைமிகு குர்ஆன் எளிமைமிகு தமிழாக்கம்
48. தெளிவுமிகு குர்ஆன் தெவிட்டாத தமிழாக்கம் (HB 28 gsm, 18x12cm)
49. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 60 gsm)
50. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 35 gsm)
51. இறைவேதம் அல்குர்ஆன் தமிழாக்கம் (Hard Bound)
52. இறைவேதம் அல்குர்ஆன் தமிழாக்கம் (Soft Bound)
53. புகழ்மிகு அல்குர்ஆனும் அதன் தமிழாக்கமும்

# ENGLISH BOOKS

1. The Ideal Husband & The Ideal Wife
2. 33 Ways Developing Inner Fear
3. 40 Guidelines & Dangers That Threaten
4. Situations & Questions - Answers
5. Prohipited & Problems And Solutions
6. Aqeeda Attawheed
7. The True Message Of Jesus Christ
8. Fortification Of The Muslim
9. Funeral Rites In Islaam
10. Explanation Of Aayat Alkursi
11. Gateway To Arabic, Starter Book, (1-5)
12. Search For Happiness
13. What Must Be Known About Islaam?

14. The Sunnah Out Spread Flags Of
 The Belief Of The Safe Supported Group

15. The Book Of Tawheed

16. The Ideal Muslim

17. Ideal Muslimah

18. Noble Quran in The English Language

19. Arraheeq Al Makhtoom

20. About Islam

21. Glourious Quran

22. Precious Invocations and Ruqyas (21x14 cm)

23. Dua and Ruqya from Quran and Sunnah
 (10.5x14 cm)

## தமிழ் இஸ்லாமிய போஸ்டர்கள்

1. நல்லுறவு மலர
2. அல்குர்ஆன் கூறும் வாழ்வியல் அறிவுரை
3. நாவைப் பேணுக
4. நீங்கள் வணங்கத் தகுதியான இறைவன் யார்?
5. அல்லாஹ் நேசிக்காத கூட்டங்கள்
6. இறுதிப் பேருரை (சிறியது)
7. மீளாப் பயணம்
8. இறுதிப் பேருரை (பெரியது)

## ENGLISH ISLAMIC POSTERS

1. Mind your Tongue
2. Journey of no Return

## ARABIC SCHOOL BOOKS

1. LKG Text Book
2. LKG Work Book
3. UKG Text Book

4. UKG Work Book
5. 1st Text Book
6. 1st Work Book
7. Nafahaatul Eeman
8. Nafahaatul Eeman Work Book
9. 2nd Std Text Book
10. Hand Writing Ruk'a
11. Hand Writing Naskh New
13. Colouring Book
14. Alif Baa Taa

## BAYAN CD's DVD's

1. VCD & MP3
2. DVD
3. RAHEEQ MP3 CD PACK

**400க்கு அதிகமான இஸ்லாமிய தலைப்புகளில் நிகழ்த்தப்பட்ட உரைகள் VCD, DVD, MP3 களில் கிடைக்கும்.**

Quality Islamic Bayans on Various Topics
Available in
VCD, DVD & MP3 Formets.

-----------------------------

Bank Account Details

**DARUL HUDA**
**Indian Bank**
**Current A/c No. 6724227449**
**Branch: Mannady,**
**IFS Code: IDIB000M016**
**Chennai - 1.**

-----------------------------